விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 07 திங்கட்கிழமை (23.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

பொதுமக்களின் செயற்பாட்டினை பொறுத்தே

## ஊரடங்குச் சட்டத்தினை மேலும் நீடிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முடக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதன் அடிப்படையிலேயே தனிமைப்படுத்தல் 19

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கை மீறி

## வீதியில் சுற்றியவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

### 7 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்போது யாழ். நகரில் நடமாடியோ 19

கொரோனாவால்

## வவுனியாவில் இருவர் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் கொரோனாத் தொற்றால் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மதவுவைத்த குளம் கொரோனா வைத்தியசாலையில் 19

இலங்கையில் நேற்று மட்டும்

# 4,304 பேருக்கு கொரோனா

### அதிகூடிய தொற்றுறுதியான நாளாகப் பதிவு

(கொழும்பு)

**இலங்கையில் நேற்று மட்டும் 4,304 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டில் ஒரே நாளில் 4 ஆயிரத்தைக் கடந்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இதுவரையில் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நாளாக நேற்றைய நாள் பதிவாகியுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 3 இலட்சத்து 90 ஆயிரமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஞா)

யாழில் உயிரிழந்த

## இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த மேலும் இருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 19

வவுனியாவில்

## 94 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 94 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் 19

## கிளிநொச்சியில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியின் 155 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.



19

கொரோனாவால்

## +183 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்றால் மேலும் 183 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் 19

## குருநகரில் வாள்வெட்டு; மூன்று பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்து மூவர் மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதி 19

## யாழில் 57 ஆயிரம் குடும்பங்கள் 2 ஆயிரம் ரூபாய் பெறத் தகுதி



### அரச அதிபர் மகேசன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரம் ரூபாய் நிவாரணம் பெறுவதற்கு 57 ஆயிரம் குடும்பங்கள் தகுதி பெற்றிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் 19

வடக்கு, கிழக்கில்

## இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட 17 மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை 19

யாழில் 64 பேர் உட்பட

## வடக்கில் 185 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 64 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 185 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. 19

## மூன்று வாரங்களாவது நாட்டை முடக்குங்கள்

### விசேட வைத்திய நிபுணர் அபேசிங்க

(கொழும்பு)

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் ஏனையோரைவிட தொற்றுக்கு உள்ளாகும் வீதம் 9 மடங்கு அதிகமாகும் என்று ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க - இலங்கை கூட்டாண்மை இருதரப்பும் விரிவாக கலந்துரையாடல்

(கொழும்பு)

அமெரிக்காவில் இருந்து இலங்கையில் மேற்கொள்ளப்படும் தனியார் துறை முதலீடுகளை வரவேற்கிறோம். மேலும் அமெரிக்க - இலங்கை கூட்டாண்மைப் பேச்சுவார்த்தை, வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பின் கூட்டு ஆணைக்குழு மற்றும் அமெரிக்க - இலங்கை துறைசார் உரையாடல்கள் உள்ளிட்ட ஏனைய இருதரப்பு விடயங்கள் குறித்து அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.



கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுதல், எம்.வி. எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தத்தினால் ஏற்பட்ட சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பொருளாதாரத் தாக்கத்தைத் தணித்தல் மற்றும் ஒத்துழைப்பை எதிர்பார்த்தல் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட ஆதரவுகளுக்காக இதன் போது நன்றி தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி சபையின் அபிவிருத்தி அதிகாரிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி சபை, சர்வதேச அபிவிருத்திகளுக்கான அமெரிக்க உதவிதிட்டம் (யு.எஸ். எயிட்) மற்றும் இலங்கை வர்த்தக சபை ஆகியவற்றுக்கு இடையே சமீபத்தில் எட்டப்பட்ட முத்தரப்பு ஒத்துழைப்புக்களை வெளிவிவகார அமைச்சர் இதன் போது வரவேற்றார். அமெரிக்காவில் இருந்து இலங்கையில் மேற்கொள்ளப்படும் தனியார் துறை முதலீடுகளை வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அமெரிக்க - இலங்கை கூட்டாண்மைப் பேச்சுவார்த்தை, வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பின் கூட்டு ஆணைக்குழு மற்றும் அமெரிக்க - இலங்கை துறைசார் உரையாடல்கள் உள்ளிட்ட ஏனைய இருதரப்பு விடயங்களும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஞா)

# யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளருக்கு மிரட்டல்

## தென்னிலங்கை வாசி கைது

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவை தொலைபேசியில் மிரட்டிய நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதி செயலக அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்திய அந்த நபர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான ஒப்பந்தத்தை தாம் முன்மொழிபவருக்கே வழங்க வேண்டும் என்று மிரட்டியுள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பு கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மருத்துவமனை பதில் பணிப்பாளருக்கு வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கினார்.

அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் நிலைய, முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, தொலைபேசி அழைப்பு எடுத்தவர் நீர்கொழும்பில் வசிப்பவர் எனக் கண்டறிந்தார்.

அவரைக் கைது செய்வதற்கான விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த யாழ்ப்பாணப் பொலிஸார், பிடியாணை உத்தரவு ஒன்றையும் பெற்றனர்.

சந்தேகநபரின் இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய முதன்மை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபரைக் கைது செய்து யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். தற்போது நாட்டில் நிலவும் கோவிட்-19 பரவல் காரணமாக சந்தேக நபரை நிபந்தனையுடனான பிணையில் விடுவித்து நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்தது.(ஞா)

## ஒருமித்து செயற்படுவது தொடர்பில்

# தமிழ்க் கட்சிகள் நேற்று இணைய வழி ஊடாக சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படுவதற்காக தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மெய்நிகர் இணைய வழியின் ஊடாக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் மாவை சேனாதிராஜா, சி. வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், என்.ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிட்டத்தட்ட மூன்றரை மணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக்கூடிய விடயங்கள், எதிர்வரும்ஐ.நாமனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் மற்றும் தமிழ் தரப்பினரோடு அரசாங்கம் முயற்சிக்கும் பேச்சுவார்த்தை ஆகியவை முக்கிய விடயங்களாகக் கருத்தில் கொள்ளப்பட்டன.

ஏற்கனவே தமிழ் கட்சிகள் சந்தித்த கூட்டங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்ட விடயங்களில் மிக முக்கியமாக, முதல் கட்டமாக ஒருமித்த நிலைப்பாட்டில் இணக்கம் காணப்படுவதற்கு நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை, அரசியல்கைதிகளின் விடுதலை, தாயகப் பரப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் அரசியல் யாப்பில் உள்ள 13வது திருத்தச் சட்டத்தை முற்றாக நடைமுறைப்படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் என்பவையாகும்.

13வது திருத்தச் சட்டத்தை எம்முடைய தீர்வாக ஏற்க முடியாது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது சாத்தியமில்லை என்பது அனைவருடைய நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய 13ஐ நிறைவேற்ற அரசு முன் வருவது நல்லிணக்க நடவடிக்கையாக கருத முடியும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயங்களில் காத்திரமாக ஒருமித்து செயலாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது. அதேவேளை மற்ற விடயங்களையும் கட்டம் கட்டமாக ஒருமித்து எதிர்காலத்தில் முன்னெடுக்கவும் இணக்கம் காணப்பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக அரசுடனான பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம். ஆயினும் அது தமிழ் மக்களின் நலன்களுக்காக அமைய வேண்டும் என்பதிலும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசு தப்பிக்க இடமளிக்கக் கூடாது என்பதிலும் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என முடிவு எட்டப்பட்டது. போருக்கு முன்னும் பின்னும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்குக் கொடுத்திருக்கும் பல பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாகும். இது பேச்சுக்கான ஒரு நல்லிணக்க நடவடிக்கையாக அமைவதோடு சாதகமான சூழலையும் ஏற்படுத்தும். ஆகவே சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் தமிழ் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில், மேல் குறிப்பிட்ட இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உட்பட மற்றும் பல விடயங்களையும் உள்ளடக்கிய கோரிக்கையை முன் வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரவிருக்கும் ஐ.நா கூட்டத் தொடரில் 46/1 பிரேரணை சம்பந்தமாக ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதன் பொருட்டு தமிழ் தரப்பினால் ஒருமித்து அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதில், 46/1 பிரேரணையில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதே வேளை அவற்றிற்கு எதிராக செயற்படுவதை சுட்டிக்காட்டியும் குறிப்பாக பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் விபரங்களையும் உள்ளடக்குவது என்று இணக்கம் காணப்பட்டது.

மூன்றரை மணிநேரம் நடைபெற்ற இந்த கலந்துரையாடல் மிக ஆரோக்கியமான முறையில் நடைபெற்றதோடு மீண்டும் விரைந்து சந்திப்பதற்கான ஒத் [illegible] பிற்பகல் இரண்டு [illegible] நிறைவு பெற்றது. (ஞா)

## 10 இலட்சம் பரிசோதனைகளை

# முன்னெடுக்கத் தயார்

## வைத்தியர் குமுதேஷ் தெரிவிப்பு

(கொழும்பு)




கோவிட் பரிசோதனைகளை பாரியளவில் விஸ்தரித்தல் உள்ளிட்ட விஞ்ஞானபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கான அடிப்படை வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமாயின் குறுகிய காலத்திற்கு 10 இலட்சம் கோவிட் பரிசோதனைகளை முன்னெடுக்கும் சவாலை ஏற்பதாக சுகாதார தொழில் வல்லுநர்கள் அமைப்பின் தலைவர் வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

நாடு முடக்கப்பட்டுள்ள இந்த காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், சுகாதார தொழிற்சங்கங்கள், மதத் தலைவர்கள் மற்றும் சில அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்பினரின் முயற்சியின் பின்னர் 10 நாட்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ளது. இந்த 10 நாட்களையும் விஞ்ஞானபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம் என்றார். (ஞா)

## பிரபல விளையாட்டு வீரர்களான

# தந்தையும் மகனும் கொரோனாவால் பலி

(கொழும்பு)



கொழும்பு றோயல் கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் கல்லூரியின் கிரிக்கெட் கழக உறுப்பினருமான சுல்கி மொஹமட் மற்றும் அவரது தந்தையான மருதானை சாஹிரா கல்லூரியின் முன்னாள் பிரபல ரக்பி வீரர் இப்ராஹிம் ஹமீட் ஆகியோர் இரண்டு நாட்களுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் வசித்து வந்த சுல்கிமொஹமட் நேற்று முன்தினமும் அவரது தந்தை இப்ராஹிம் ஹமீட் கடந்த வெள்ளிக்கிழமையும் உயிரிழந்துள்ளனர். (ஞா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா பிறழ்வின் 4 திரிபுகள் கண்டறிவு

## தடுப்பூசிகள் அவற்றிற்கு திறம்பட பதிலளிக்கின்றன

### கலாநிதி நீலிகா



**(கொழும்பு)**

**நாட்டில் டெல்டா பிறழ்வின் 04 திரிபுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் நாட்டில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகள் இந்த அனைத்து பிறழ்வுகளுக்கும் திறம்பட பதிலளிப்பதாகவும் கலாநிதி நீலிகா மலவிகே தெரிவித்தார்.**

நேற்று காலை விசேட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடுமையான பயணக் கட்டுப்பாடு அமுலிலுள்ள இந்த காலத்தில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என, குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளை தெரிவு செய்யாமல் அருகிலுள்ள மத்திய நிலையங்களில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)

## பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளி அடுத்த மாதம் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகளை அடுத்த மாத இறுதிக்குள் வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக உப தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சந்தன உடவத்த குறிப்பிட்டுள்ளார்.

நிலவும் கொரோனா தொற்று நிலைமையிலும், குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை ஈடுபடுத்தி, வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இம்முறை ஒரு இலட்சத்து 10 ஆயிரம் விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் உப தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## வர்த்தகத்திற்கான அனுமதிப்பத்திரம் பொலிஸாரினால் வழங்கப்படாது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கின் போது வர்த்தகத்திற்கான அனுமதிப்பத்திரங்கள் பொலிஸாரினால் வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார்.

எனவே, அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்காக பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களை அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-5)

## சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற அரசு தாமதிப்பது ஏன்?

### ஐ.தே.க கேள்வி

(கொழும்பு)

சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. மக்கள் சாதாரண நாட்களை போன்று வீதிகளில் நடமாடுகிறார்கள்.என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தினசரி கொவிட் தொற்றினால் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை 200ஐ அண்மித்துள்ளது. மூன்று வார காலத்திற்கு நாட்டை முடக்குமாறு அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்தினோம்.

காலதாமதமான நிலையில் 10 நாட்களுக்கு மாத்திரம் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வீதிக்கு சென்று பார்த்தால் வழமையான நாட்களை போன்று மக்கள் வீதியில் நடமாடுகிறார்கள். சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

நாட்டை தொடர்ந்து முடக்க வேண்டுமாயின் நாட்டு மக்கள் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி நாட்டு மக்களிடம் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொருட்களினதும் விலையும், சேவைகளினதும் கட்டணமும் உயர்வடைந்துள்ளன. சம்பளம் செலுத்த முடியாத காரணத்தினால் அரச ஊழியர்கள் தங்களின் சம்பளத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்று குறிப்பிடும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் கொடுப்பனவையும் இரத்து செய்யும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லும் யோசனையை முன்வைத்துள்ளோம்.சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொண்டால் ஏனைய நாடுகளின் உதவிகளையும் இலகுவில் பெற்றுக் கொள்ளலாம். கொவிட் தாக்கத்தின் ஊடாக செல்வந்தர்கள் இலாபமடையும் செயற்பாடுகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்காமல் சுகாதாரத்தையும், பொருளாதாரத்தையும் முன்னெடுத்து செல்வது அவசியமாகும். என அவர் தெரிவித்தார். (நி-5)

## தனிமைப்படுத்தல் ஊரடங்கை துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்

### சவேந்திர சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் அத்தியாவசிய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தை துஷ்பிரயோகம் செய்வது சட்டவிரோதமாகும் என்று கொவிட் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நர்ட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் இது வைரசை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார ஆலோசனைப்படி விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

ஆடைத் தொழில்கள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் மருந்தகங்களின் செயற்பாடுகள் அனுமதிக்கப்படும். தொழிலுக்குச் செல்பவர்கள் விஷேட அனுமதி பெறத் தேவையில்லை. வீதித்தடைகளில் உள்ள பொலிஸார் இராணுவத்தினரிடம் உங்களது அடையாள அட்டையைக் காட்டி அனுமதி பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## எரிபொருள் விலை குறையும் வாய்ப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை திடீரென சரிந்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இலங்கையில் எரிபொருள் விலையை குறைக்குமாறு நிதி யமைச்சர் பஷில் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


நுகர்வோர் உரிமை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே கடிதம் மூலம் இக்கோரிக் கையை முன் வைத்துள்ளார்.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை 73.95 டொலராக இருந்து வந்த நிலையில், தற்போது 62.14 டொலராக சரிந்துள்ளதென அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நிதியமைச்சராக பசில் ராஜபக்ஷ பதவியேற்றதும் எரிபொருள் விலை குறைக்கப்படும் என பிரச்சாரம் செய்யப்பட்டது.உலக சந்தை யில் ஏற்பட்டுள்ள சாதகமான நிலையை நிதியமைச்சர் பயன்படுத்திக் கொள்வார் என பலரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தி ஹன்ட்ரெட்' கிண்ணத்தை கைப்பற்றியது சவுத்தன் பிரேவ்



இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிமுகப்படுத்தியுள்ள 100 பந்துகள் கொண்ட தி ஹன்ட்ரெட் தொட ரின் இறுதிப் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் பர்மிங்காம் பீனிக்ஸ் மற்றும் சவுத்தன் பிரேவ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற் சியில் வெற்றி பெற்ற மொய்ன் அலி தலைமையிலான பர்மி ங்காம் பீனிக்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கிணாங்க முதலில் துடுப்பெடுத்தாடிய ஜேம்ஸ் வின்ஸ் தலைமையிலான சவுத்தன் பிரேவ், 100 பந்துகள் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களை குவித்தது.

அணி சார்பில் ஸ்டிர்லிங் 61 (36) ஓட்டங்களையும், ரோஸ் வைட்லி 44 (19) ஓட்டங்களையும், அலெக்ஸ் டேவிஸ் 27 (20) ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

169 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பர்மிங்காம் பீனிக்ஸ் அணியால் 100 பந்துகள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களை மாத்திரம் பெற முடிந்தது.

அணி சார்பில் அதிகபடியாக லிவிங்ஸ்டன் 46 (19) ஓட்டங்களையும், மொய்ன் அலி 36 (30) ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

இதன் மூலம் 32 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற சவுத்தன் பிரேவ் அணி முதல் 'தி ஹன்ட்ரெட்" ஆண்களுக்கான கிண்ணத்தை கைப்பற்றியது.

இது இவ்வாறிருக்க வாகை சூடிய சவுத்தன் பிரேவ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன என்ற படியால் இலங்கை ரசிகர்கள் மத்தியிலும் தற்சமயம் இப்போட்டியின் முடிவுகள் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-6)

# ஹசரங்க, சமீர
## ஆர்.சி.பி.இல் ஒப்பந்தம்




நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல்.தொடரில் விளையாடுவதற்கு இலங்கை வீரர்களான வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை ஐ.பி.எல். கிண்ணத்தை ஏந்தாத றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக இவர்கள் இருவரும் விளையாட உள்ளதனை பெங்களூர் அணி நிர்வாகம் உறுதிசெய்துள்ளது.

இதில் வனிந்து ஹசரங்க, அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஆடம் செம்பாவுக்கு மாற்றீடாக விளையாடவுள்ளார்.

அதேபோல முன்னாள் வேகப்பந்து ஜாம்பவான் சமிந்த வாஸின் பயிற்சியின் கீழ் வேகப்பந்து வீச்சாளரான துஷ்மந்த சமீர சிறப்பாக பந்து வீசி வருகிறார்.

இந்நிலையில் விராட் கோலி தலைமையிலான றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக இருவரும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். (4-6)

# தல டோனியின் டான்ஸுடன்
## வெளியானது ஐ.பி.எல்.புரோமோ வீடியோ



ஐ.பி.எல். தொடரின் 2-ம் பகுதி அடுத்த மாதம் 19 ஆம் திகதி தொடங்கும் நிலையில் பி.சி.சி.ஐ, போட்டியை ஒளிபரப்பும் ஸ்டார் நிறுவனம், பங்கேற்கும் அணிகள் தயாராகி வருகின்றன.

ஐ.பி.எல். 2021 சீசன் இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடங்கியது. இந்தியாவில் கொரோனா தொற்றின் 2-வது அலை உச்சத்தை அடைந்து வந்த நிலையிலும் கடுமையான பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி பி.சி.சி.ஐ. வெற்றிகரமாக போட்டியை நடத்தியது.

எனினும் பாதுகாப்பு வளையத்தை தாண்டி வீரர்களை கொரோனா வைரஸ் தொற்று தாக்கியது. இதனால் மே 2-ஆம் திததிக்குப்பின் போட்டிகள் நடத்தப்படவில்லை. அதன்பின் ஐ.பி,எல் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது.


பின்னர் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்டம்பர் 19 ஆம் திகதி முதல் அக்டோபர் 15-ஆம் திகதிவரை நடத்தப்படும் என பி.சி.சி.ஐ அறிவித்தது.

ஐ.பி.எல். போட்டிக்கான ஆர்வத்தை தூண்ட ஸ்டார் நிறுவனம் அதிரடியான முடிவுகளை எடுத்துள்ளது. அதன் தொடர்ச்சியாக முதலில் டோனியை வைத்து ஒரு அசத்தலான புரோமோவை உருவாக்கி அதை வெளியிட்டிருக்கிறார்கள்.

கலரிங் செய்த சிகை அலங்காரம், ஜொலிக்கும் சட்டையுடன் எம்.எஸ். டோனி போடும் ஆட்டம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்து, இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை ஐ.பி.எல். அதிகாரப்பூர்வ டுவிட்டர் இணைய தளம் வெளியிட்டுள்ளது. (4-6)



(சென்னை)



(மும்பை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி. எல் போட்டிக்கான பயிற்சியில் சென்னை, மும்பை அணிகள்....

# 15ம் ஆண்டு 1ம் ஆண்டு நினைவுகள்



| தோற்றம் | தோற்றம் |
|---|---|
| 09 03 1939 | 19 09 1947 |
| மறைவு | மறைவு |
| 16 12 2006 | 31 08 2020 |

அமரர் **வல்லிபுரம் முருகுப்பிள்ளை**

அமரர் **முருகுப்பிள்ளை நாகம்மா**

காலங்கள் பல கடந்தாலும் சில நினைவுகள்
ஞாலத்தில் அழிந்து போவது இல்லை
காலத்தின் கணக்கு முடியும் வரை - காத்திருப்போம் நாம்
ஞாலத்தில் வாழ மீண்டும் வருவீர்களென்று
நீங்கள் எங்களுக்கு முன்மாதிரியாக
கௌரவத்துடன் வாழ்ந்து காட்டினீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கின்றோம்
இன்றைய போலி உலகில் ஆலயங்களில் கூட பூசை செய்ய
முடியாதளவுக்கும் உணவு கூட பரிமாற
முடியாதளவுக்கும் மாறிவிட்டது
உங்களது கௌரவத்தையும் நேர்மையையும் எம்மால்
எப்போதுமே அணுகிப் பார்க்கவே முடியாது.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(7679)

காத்திகேசர் வீதி,
புலோலி மேற்கு புலோலி.

குடும்பத்தினர்.

# விருப்பமான தடுப்பூசிக்காக காத்திராமல் கிடைப்பதை செலுத்திக் கொள்ளுங்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

**(கொழும்பு) தமக்கு விருப்பமான தடுப்பூசிக்காக காத்திருக்காமல், கிடைக்கப்பெறும் ஏதேனும் ஒரு கொவிட் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவ்வாறே 60 வயதுக்கு மேற்பட்டோர் முடியுமானவரை விரைவாக, தமக்கு அருகிலுள்ள தடுப்பூசி செலுத்தல் நிலையத்துக்குச் சென்று தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது கொவிட் தொற்றால் மரணிப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனவும் தமக்கு விருப்பமான தடுப்பூசியை செலுத்திக்கொள்ள காத்திருக்காமல், தமக்கு கிடைக்கப்பெறும் ஏதேனும் ஒரு தடுப்பூசியை செலுத்திக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது கொவிட் தொற்றால் மரணிப்பவர்களில் 70 முதல் 80 சதவீதமானோர் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். ( நி-5)



# தட்டுப்பாடின்றி எரிவாயு கிடைக்கும்

## லசந்த அழகியவன்ன தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய ஊரடங்கு காலத்தில் எந்த எரிவாயு தட்டுப்பாட்டுக்கும் அனுமதிக்கப்படாது என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்டுள்ள எரிவாயு பற்றாக்குறையை அடுத்து நாட்டில் உள்ள எரிவாயு இருப்பு குறித்து விசாரிக்க கேரளவாபிட்டிய லிற்றோ எரிவாயு முனையத்தில் ஆய்வு மேற்கொண்ட போது இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டார். உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், மக்களுக்கு சுமை ஏதுமின்றி நிவாரணம் வழங்கி லிற்றோ எரிவாயுவை முந்தைய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-5)

# மூன்றாவது தடுப்பூசிக்கு தயாராகுங்கள்

## இராணுவத்தளபதி

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிகளின் மூன்றாவது டோஸை பெற்றுக்கொள்ள தயாராக இருக்குமாறு நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதியும் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று கொவிட்- 19 செயலணியின் பிரதானியான, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சகல சுகாதாரப் பணியாளர்களுக்கும் முதலில், மூன்றாவது தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மரண அறிவித்தல்



## திருமதி மங்கையற்கரசி பாலசிங்கம்

தோற்றம்- 06.02.1933 மறைவு- 13.08.2021

யாழ். கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் Edmonton, Torranto கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி பாலசிங்கம் கடந்த 13.08.2021 (வெள்ளிக்கிழமை) யாழ். கல்வியங்காட்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் யசோதா (கல்வியங்காடு), லோகிதாசன் (Edmonton), பவானி (Torranto), லோகீஷ்வரன் (Virginia), விக்னேஸ்வரன் (Boston), உமா (Richmond Hill) ஆகியோரின் அன்புத் தாயாரும் அம்பிகைபாலன் (கல்வியங்காடு), சித்திரா (Edmonton), கேசவன் (Torranto), நந்தினி (Virginia), அனுசியா (Boston), சுரேன் (Richmond Hill) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தர்மராஜா, துரைராஜா மற்றும் செல்வராஜா, புவனேஸ்வரி, தம்பிராஜா, பால சௌந்திரி, புஷ்பாம்பிகை, ஞானமனோகரி, யோகேஸ்வரி, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷிதா, தர்ஷன், வீணா, அஜனி, கிரிஷானி, பிரவீனா, லக்ஷனா, மதுஷனா, கீர்த்தனா, ஷபினா, விபீஷன், சகிஷன், நிலானி, சேந்தினி, சேவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.08.2021) திங்கட்கிழமை Torranto கனடாவில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7698)

கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 077 436 9842 077 321 2527

தகவல்:- மக்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஊரடங்கை மீறியவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

**தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையை மீறி யாழ்ப்பாணம் மாநகரில் நடமாடியவர்களுக்கு அதி விரைவு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்ட விதியில் அனுமதிக்கப்பட்ட அத்தியாவசிய காரணமின்றி யாழ்ப்பாணம் மாநகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பயணித்தவர்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் யாழ்ப்பாண மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அலுவலர்கள், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து



நகரப்பகுதியில் பயணிப்போரை வழிமறித்து இவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. (4-7-33-18-104)

# பொது மக்களிடம் இன்னமும் கொரோனா விழிப்புணர்வு ஏற்படவில்லை

## நகரசபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சுகாதாரப் பணியாளர்களை விட பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் சுகாதாரப் பணியாளர்களை விட வெளியில் இருக்கும் பொது மக்களே அதிகம் கொரோனா தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இதற்கு பிரதான காரணம் மக்களிடம் இன்னமும் கொரோனா தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படவில்லை. சுகாதாரப் பணியாளர்கள் தொற்றாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்கின்ற போதிலும் அவர்கள் ஓரளவிற்கு பாதுகாப்பாகவே உள்ளனர்.

மக்கள் பொறுப்பற்ற தன்மையைக் கைவிட்டு இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

பொதுமக்களாக உணர்ந்து செயற்பட்டால் ஒழிய வேறு வழிகளில் கொரோனாவை ஒழிக்க முடியாது. சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அதிகளவில் பீ.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டால் அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படக்கூடும். அவ்வாறு பீ.சி.ஆர் பரிசோதனை செய்யாததால் தான் பொதுமக்களும் அசண்டையீனமாக உள்ளனர்.

சாவகச்சேரியில் பாரிய கொரோனா கொத்தணி உருவாகும் வாய்ப்புள்ளது. வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் என அனைவருக்குமே குடும்பம் உள்ளது.

அவர்கள் எமக்காகப் பாடுபடுகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பினை உணர்ந்து பொது மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-30)

# பிரித்தானிய லெஸ்டர் பல்கலையில் துணைவேந்தராகும் ஈழத்தமிழர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் நிஷான் கனகராஜா எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி தொடக்கம் பிரித்தானியாவின் லெஸ்ரர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெறவுள்ளார்.

உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 2018 ஆம் ஆண்டுத் தரவுகளின் படி லெஸ்டர் பல்கலைக்கழகம் 167 ஆம் இடத்தில் உள்ளது.

பிரித்தானியாவில் 25 ஆம் இடத்தில் உள்ளது. பேராசிரியர் நிஷான் கனகராஜா 1985 ஆம் ஆண்டு கணிதத்துறையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழத்திற்குத் தெரிவாகிப் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

1966 இல் சுண்டிக்குளியில் பிறந்த பேராசிரியர் நிஷான் கனகராஜாவின் தந்தை கனகராஜா யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியராகவும் தாயார் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆசிரியையாகவும் இருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6-7)




## எம் துயர் தீர்ப்பான் சண்முகன்

அழகான நல்லை முருகன் - எமக்கு
ஆறுதல் அளிக்கும் முருகன்
இன்பம் அருளும் முருகன் - தில்லை
ஈசனின் மைந்தனிவன்
உலகையே ஆட்கொள்ளும் இக்கொடிய நோயை
ஊரையே அடக்கி வைத்த கொரோனாவிலிருந்து
எம்மைக் காத்தருள ஓடி வாராயோ
ஏன் இந்தத் தாமதம் ஐயா
ஐங்கரன் தம்பியே - உந்தன்
ஒரு விழியால் தன்னும் எம்மைப் பாராயோ
ஓம் கார வேலனே
ஔவைக்கு உபதேசித்தவனே - உந்தன்
வேலால் இக்கிருமியை அழித்திடுவாய்
ஆஃவே எம் துயர் தீர்ப்பான் சண்முகன்

நல்லைக்குகன்

## 'யாம் இருக்க பயமேன்'

முருகனை நினைத்தே
மனமுருகவே என்
அருகே வந்தான்.
ஆனந்தம் கொண்டேன்
மனமகிழ்ந்தே வணங்கித்தான்
தினம் சொல்லும் மந்திரம்
"ஓம் சரவணபவ" என்றேன்
சுப்பிரமணிய பிரபுவே
சுந்தரத் தெய்வமே
எந்தனுக்கு அருள் தாருமே என்று
ஏங்கிய வண்ணம் நின்றேன்
தாங்கிய வேலைத் தூக்கியே
"தூர விலகுமே வினை" என்றான்
போர் வென்ற முருகனை
யார் வேண்டினும் சொல்வான்
"யாம் இருக்க பயமேன்"

ஆறுமுகம் சிவபாதம்
கொக்குவில்

## நல்லூரின் நாயகனே...

நானிலத்தோர் புகழ்பாட நல்லைப் பதிதனில் வீற்றிருந்து
நாற்திசையும் புகழ் மணக்க நல்லாட்சி புரியும் நாயகனே!
உன் புகழ் தனைப் பாடக் கோடி வார்த்தை வேண்டும் ஐயா!
அலங்காரக் கந்தனே உன் அருட்கண் திறந்து
காத்தருள்வாய் இந்த ஜகத்தினையே!
மனதில் இருத்தி உன் மலர்முகத்தை அனுதினமும் தொழுகிறோம்
சங்கரன் புதல்வா சரித்திரம் எழுதிடுவாய்
கொரோனாவை வேரறுத்தே!

தர்ஷிகா குணபாலன்
பண்டத்தரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்சிசன் தேவைப்பாட்டிற்கு ஒத்துழையுங்கள்

## சீனாவிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

**கொவிட் தொற்று தீவிரமடைந்ததை அடுத்து ஏற்பட்ட ஒட்சிசன் தேவைப்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சீனத் தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.**



இலங்கைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவுக்காக சீன அரசாங்கத்திற்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சீன தூதுவர் குய் ஜென்ஹாங்கை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போதே வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

கொவிட்-19 ஒத்துழைப்பு, மக்களுக்கிடையேயான பரிமாற்றங்கள், பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் பல்துறைசார் ஒத்துழைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டதாக இந்தக் கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன.

குறிப்பாக, அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதற்காக திரவ ஒட்சிசனை உடனடியாக வழங்குவதற்கு சீனாவின் உதவியை வெளிவிவகார அமைச்சர் கோரினார். (நி-5)

# வெலிமடைப் பகுதியில் ஆலங்கட்டி மழை

(கொழும்பு)



வெலிமடை பகுதியில் பனி மழை (ஆலங்கட்டி மழை) பெய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 நிமிடங்கள் விடாமல் ஆலங்கட்டி மழை பெய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலங்கட்டி மழை வானத்திலிருந்து விழும் திடநிலைப் பொழிவாகும்.

பந்துகளாகவோ ஒழுங்கற்ற உருண்டைகளாகவோ உள்ள பனிக்கட்டிகளான இவற்றை ஆலங்கட்டி என்கிறோம். வானிலை செயற்கைக் கோள்களின் மூலமும் வானிலை ரேடார் ஒளிப்படங்களிலிருந்தும் ஆலங்கட்டி மழை வாய்ப்புள்ள மேகங்களை கண்டறியலாம்.

இதேவேளை, இலங்கையில் இதற்கு முன்னரும் பல இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# எசல பெரஹராவில் கலந்து கொண்ட 45 கலைஞர்களுக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

கண்டி- எசல பெரஹராவில் கலந்துகொண்ட நடனக் கலைஞர்கள் 45 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட் டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்கள் கதிர்காமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நடனக் கலைஞர்கள் குழுவில் 76 கலைஞர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களுள் 45 பேருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்ற ரந்தோலி ஊர்வலத்தின் பின்னர், அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டதுடன், இதில் 45 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர்கள் உடனடியாக பெரஹராவில் இருந்து விலக்கப்பட்டதுடன், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:45 ½செவ் 12 சூரி6 ல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: B.A பட்டதாரிஆசிரியை<br>எதிர்பார்ப்பு:அரசதனியார் தொழில்<br>தொ.இ: B/12016 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 16செவ் 3சூரி7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:. A/L<br>எதிர்பார்ப்பு:லண்டன்.கனடா.சுவிஸ்மட்டும்.<br>தொ.இ:G/12021 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16 செவ்.சூரி11 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் :பட்டதாரி,சிரேஷ்ட உதவிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்<br>தொ.இ: B/12017 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22செவ் 6 சூரி7 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ:G/12023 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:13செவ் 9 சூரி11 ல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: B.A புகையிரத நிலைய அதிபர்<br>எதிர்பார்ப்பு:தனியார்,அரச உத்தியோகம்<br>தொ.இ: B/12018 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:17 ½செவ்12 சூரி10 ல்<br>உயரம்: 4'11"<br>தகைமை/தொழில்: B.Sc, Graduate Trainee<br>எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ:G/12024 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 30 செவ் 7சூரி8ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:லண்டன் பிரஜாவுரிமை<br>எதிர்பார்ப்பு:உள்நாடுமட்டும்<br>தொ.இ: B/12022 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:20 ½செவ்.சூரி11 ல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: Research / Analyst Canada<br>எதிர்பார்ப்பு:கனடாவில் இருப்பின் நன்று<br>தொ.இ:G/12025 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]


# குறைந்தளவு வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இன்று முதல் 2000 ரூபாய் கொடுப்பனவு

(கொழும்பு)



கொரோனா வைரஸ்காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ளதால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

அதன்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2000 ரூபாய் நிவாரண கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை முதல் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக் காரணமாக நாடு எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் முடக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கொடுப்பனவு பற்றிய தகவலை நிதி அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த முடக்க நிலைகளின் போது இருமுறை 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருந்த போதிலும் இம்முறை 2 ஆயிரம் ரூபாய் மாத்திரமே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சத்தமின்றி அதிகரிக்கப்பட்ட மருந்துகளின் விலைகள்



(கொழும்பு)


அத்தியாவசிய மற்றும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சுமார் 60 மருந்துகளின் விலையை ஏறக்குறைய 9 சதவிகிதம் அதிகரிக்க மருந்தகங்களுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் கையொப்பத்துடன் வெளியான வர்த்தமானி அறிவித்தலில் இந்த விலை அதிகரிப்புக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே கொரோனா நெருக்கடி நேரத்தில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள நிலையில் மருந்துப் பொருட்களின் விலைகளையும் அரசாங்கம் அதிகரிக்க அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை நெல்லிற்கு நெருக்கடி விவசாயிகள் சுட்டிக்காட்டு



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லிற்கான நெருக்கடி காணப்படுகின்றது. சிறுபோக நெற்செய்கை கூடுதலாக விதை நெல் உற்பத்தியினை இலக்காக கொண்டதாக இருந்தாலும் நெல்லினை அறுவடை செய்தவுடன் பச்சை நெல்லாக விவசாயிகள் கூடுதலாக விற்பனை செய்து வருவதன் காரணமாக விதை நெல்லிற்கான நெருக்கடி காணப்படுவதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுபோக கூட்டங்களை நடத்துகின்ற அதிகாரிகள் விதை நெல் உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் அது மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளாக போதிய நெல் உலர விடும் தளங்கள் அமைக்கப்படவில்லை. களஞ்சிய வசதிகள் இல்லை. நெல் உலர விடும் தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் விவசாயிகள் நெல்லினை உலர விடுகின்ற அவலம் காணப்படுகின்றது.

இதன் காரணமாக கூடுதலான விவசாயிகள் நெல்லினை உலர விடாமல் நெல்லினை அறுவடை செய்தவுடன் நெல்லினை விற்பனை செய்கின்ற நிலைமை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லிற்கான நெருக்கடி தொடர்வதாக விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.(7-4-6-350)

# முக்கிய செயற்பாடுகள் நடைபெறுகின்றன

## பிரதேச சபை தவிசாளர்

(அக்கராயன்)

பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது. தற்போது கொவிட் 19 முடக்க நிலை ஏற்பட்டிருந்தாலும் பிரதேச சபையின் முக்கிய பணிகளான கழிவு அகற்றல், குடிநீர் தேவைப்படும் பகுதிகளுக்கு எந்த நேரமும் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் என்பன நடைபெறுகின்றன. அதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் தேவைப்படுபவர்கள் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டால் குடிநீரினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (7-4-6-350)

# நிறைவேறாத திட்டமாக மாறிய வன்னேரிக்குளம், தேவன்குளம் திட்டம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், பழையமுறிகண்டி ஆகிய குளங்களின் நீர் வன்னேரிக்குளத்தினை நிரப்பி வன்னேரிக்குளத்தின் மேலதிக நீர் கடலினைச் சென்றடைகின்றது. கடலுக்கு வீணாகச் செல்லும் நீரினை வன்னேரிக்குளத்தினையும் தேவன்குளத்தினையும் இணைப்பதன் மூலம் பெருமளவு நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளலாம் என்பதே முன்னாள் அரச அதிபரின் திட்டமாக இருந்தது.

ஆனால்,இத்திட்டம் தற்போது கைவிடப்பட்ட திட்டமாக அல்லது நிறைவேற்றப்படாத திட்டமாக காணப்படுகின்றது. குறித்த திட்டம் நிறைவேற்றப்படுமானால் வன்னேரிக்குளத்தின் உவர் நிலப் பாதிப்புகள் இல்லாமற் போகும். ஜெயபுரம் கிராம மக்களின் வயற் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளத்தில் இருந்து உவர் காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும் வயல் நிலங்கள் வழங்கக் கூடியதாக இருக்கும். தற்போது வன்னேரிக்குளத்தின் கீழ் 363 ஏக்கரிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் 1.000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7-4-6-350)

# வவுனியா வைத்தியசாலைக்கு சுகாதார பொருட்கள் கையளிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்கத்தின் பிரித்தானிய கிளையினரால் வவுனியா வைத்தியசாலைக்கு உயிர்காப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டமருத்துவ பிரிவினரது வேண்டுகோளுக்கிணங்க, பிரித்தானிய கிளையினரால் அன்பளிப்பு செய்யப்பட்டு நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. சுமார் 11இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன், அவை வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.(7-4-6-299)

# மன்னாரில் மேலும் 46 பேருக்கு தொற்று

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்ற நிலையில் மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் அருள் இல்லத்தை சேர்ந்த சிறுவர்கள் மற்றும் கடமையாற்றுபவர்கள் 26 பேர் உள்ளடங்கலாக மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 46 கொரோனா தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நேற்று காலை வெளியிடப்பட்ட கொரோனா நிலவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4-6-285)

# மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது



(கரணவாய்)

நெல்லியடி கரணவாய் கிழக்கு பகுதியில் உள்ள வீடடில் 22 மதுபானப் போத்தல்களை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட குறித்த நபர் விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (4-6-7-60)

# உரிமை கோரவும்

(கரணவாய்)

நெல்லியடி முள்ளிப் பகுதியில் பசுக்கன்று ஒன்று பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. குறித்த கன்று ஒரு வாரத்திற்கு முன்பு நெல்லியடி பொலிஸாரால் பிடிக்கப்பட்டது. இதற்கு உரிமையானவர்கள் தகுந்த ஆதாரத்தை காட்டி பெற்றுக் கொள்ளுமாறு நெல்லியடி பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-6-7-60)

நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் காலை மன்னார் மாவட்டத்தில் பைஸர் கொரோனா தடுப்பூசியின் 2 ஆவது தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள்,பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன் குறித்த தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



(படம் :-ஜோசப்நயன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

23.08.2021
ஆவணி 07, திங்கட்கிழமை
பிரதமை பிற்பகல் 5.39 மணிவரை
சதயம் முன்னிரவு 9.19 மணிவரை
சுபநேரம் -12.05-1.35 மணிவரை
இராகு காலம் 7.35- 9.05 மணிவரை
சந்திராஷ்டமம்- பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்:** உறவினர்களும், நண்பர்களும் உங்களுக்கு உதவ முன்வருவார்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கடகம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி:** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், அதிஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கும்பம்:** கற்பனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள்.

**மீனம்:** எப்படி நடக்குமென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

பாவத்தை விட்டுவிடு அப்போது பாவம் உன்னை விட்டுவிடும்

# 25 மதுபான போத்தல்களுடன் வவுனியாவில் ஒருவர் கைது

(குருமன்காடு)

மதுவரித் திணைக்களத் தினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 25 மதுபானப் போத்தலுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கற் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கண்டி வீதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கற் ஒன்றிற்கு சென்ற இருவர் 25 மதுபான போத்தல்களை கொள்வனவு செய்துள்ளனர். குறித்த போத்தல்களை ஒருவருடைய மோட்டார் சைக்கிளில் வைத்து கொண்டு செல்ல முற்பட்ட போது அங்கு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட மது வரித் திணைக்கள அதிகாரிகள் 25 மதுபான போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபரை கைது செய்ததுடன், மதுபான போத்தல்களையும் பறிமுதல் செய்தனர்.

குறித்த நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (7-4-6-250)

# ஊரடங்கை மீறி திறந்த வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

(குருமன்காடு)

வவுனியாவில் ஊரடங்கு சட்ட நேரத்தில் திறந்திருந்த 6 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப்பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தல் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணி முதல் எதிர் வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நாடு முழுவதும் முழுமையான முடக்கம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், வவுனியாவில் மொத்த மரக்கறி விற்பனை நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்ட 6 வர்த்தக நிலையங்கள் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸாரால் எதிர் வரும் 30 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்டு நோட்டீஸ் ஒட்டப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக கடுமையான எச்சரிக்கையும் விடப்பட்டது. (7-4-6-250)

# நேர்முகத்தேர்வு பிற்போடப்பட்டது

(பனிக்கன்குளம்)

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி-கருநாவல்பற்று தெற்கு, விவாகப்பதிவாளர் பதவி-புதுக்குடியிருப்பு ஆகிய வற்றுக்கான நேர்முகத் தேர்வு இன்றைய தினம் இடம்பெறாது எனவும் நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறியத்தரப்படும் எனவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி கருநாவல்பற்று தெற்கு, விவாகப் பதிவாளர் பதவி புதுக்குடியிருப்பு ஆகியவற்றுக்கான நேர்முகத் தேர்வு இன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது இருப்பினும் நாட்டின் தற்போதைய கொரோனா நிலவரம் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்பன காரணமாக குறித்த நேர்முகத் தேர்வு இன்று இடம்பெறாது எனவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.(7-4-6-281)

# கனகராயன் ஆற்றில் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வு

(அக்கராயன்)



கனகராயன் ஆற்றில் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வு நடைபெறுவதன் காரணமாக சூழல் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் அம்பகாமம், புலிமச்சிநாதகுளம் பகுதியில் மணல் அகழ்விற்கான அனுமதிகள் சட்டரீதியாக வழங்கப் பட்டுள்ளன.

ஆற்றில் இருந்து முறையாக மணல் அகழ்வினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆற்றின் இரு பகுதியிலும் பெரும் குவாரிகள் அமைத்து மணல் அகழ்வில் ஈடுபடுவதன் காரணமாக ஆற்றிற்கு அருகில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற வயல் நிலங்களுக்கு ஆபத்துகள் ஏற்பட்டுள்ளதாக அம்பகாமம் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். மணல் அகழ்வுகள் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள போதிலும் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் கண்டபடி மணல் அகழ்வில் ஈடுபடுவதாகவும் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கான அனுமதிகளை இரத்துச் செய்ய வேண்டும் எனவும் கனகராயன் ஆற்றின் இரு பகுதியிலும் உள்ள மரங்கள் கூடுதலாக மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களினால் அழிக்கப்பட்டு வருவதாகவும் அம்பகாமம் மக்கள் தெரிவிக்கப்படுகின்றது. (7-4-6-350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



பழைமையான வரலாற்று அடையாளங்களையும், புதுமையான தொழில்நுட்பத்தின் ஆச்சரியங்களையும் ஒருசேர கலவையாக தாங்கி நிற்கும் நகரம்தான் சென்னை. தமிழகத்தின் தலைநகரம் ஆகும். இந்தியாவின் 4-வது பெரிய நகரம். இந்த பாரம்பரிய நகரம் நேற்று தனது 382 ஆவது பிறந்த நாளை கொண்டாடியது.

## 12 வயதிற்கு மேற்பட்டோருக்கு சைகோவ்-டி தடுப்பூசி விநியோகம்




(டில்லி)

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சைகோவ்-டி கொரோனா தடுப்பூசியானது செப்டெம்பர் இறுதியில் இருந்து விநியோகிக்கப்படும் என்று சைடஸ் கேடிலா நிறுவனம் தெரிவித்துள்ளது.

சைகோவ்-டி தடுப்பூசியை 12 வயதைக் கடந்த அனைவருக்கும் செலுத்துவதற்கான அனுமதியை இந்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு இயக்குநரகம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது.

இந்நிலையில், அத்தடுப்பூசியைத் தயாரித்த சைடஸ் கேடிலா நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் சர்வில் படேல்காணொலிவாயிலாகசெய்தியாளர்களிடம் கூறியதாவது.

சைகோவ்-டி கொரோனா தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு அவசரகால ஒப்புதல் கிடைத்துள்ளது.

செப்டெம்பர் மத்தியில் அல்லது இறுதியில் தடுப்பூசி விநியோகிக்கப்படும் என்று நம்புகிறோம்.

தடுப்பூசி உற்பத்தியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மற்ற நிறுவனங்களுடன் இணைந்து அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தற்போது 3 டோஸ்களாக செலுத்தப்படும் சைகோவ்-டி தடுப்பூசியின் பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2 டோஸ்களாக செலுத்தப்படும் தடுப்பூசிக்கு ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளை நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவித்தார். (7-4)

## பஞ்சாப்பில் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டம்

பஞ்சாபில் கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தவும், ஏற்கனவே கொள் முதல் செய்யப்பட்ட கரும்புக்கு சுமார் ரூ. 250 கோடி நிலுவைத் தொகையை வழங்கவும் வலியுறுத்தி ரயில் தண்டவாளங்களிலும் தேசிய நெடுஞ்சாலைகளிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை காலவரையறையற்ற போராட்ட த்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தால் பெரோஸ்பூர் கோட்டத்தில் 69 ரயில்கள் ரத்து செய்யப்பட்டன.

54 ரயில்கள் மாற்று வழித்தடங்களில் திருப்பி விடப்பட்டன என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். (7-4)

## ஆப்கானிஸ்தானி

## கைப்பற்றிய த

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைக்க தலி
காட்டி வரும் நிலையில் பஞ்ஷிர் பள்ளத்தா
உள்ள மூன்று மாவட்டங்களை கைப்பற்றி
எதிர்ப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

## சூயஸ் கால்வாயை கடந்த 'எவர் கிரீ



(கெய்ரோ)

உலகின் மிக முக்கிய கடல் வர்த்தகப் பாதையாக எகிப்தின் சூயஸ் கால்வாய் அமைந்துள்ளது. இதற்கிடை

## இருபாலார் கல்விக்கு தலிபான்கள் தடை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஹெராட் மாகாணத்தில் இருபாலாரும் இணைந்து கல்வி கற்பதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

தங்களது முந்தைய ஆட்சியைப் போலன்றி அமெரிக்கா மற்றும் தேசிய அரசுடன் இணைந்து பணியாற்றியவர்கள் அனைவருக்கும் தற்போது பொதுமன்னிப்பு அளிக்கப்படும் பெண்களின் உரிமைகள் எனவும் பாதுகாக்கப்படும் எனவும் தலிபான்கள் அறிவித்திருந்தனர்.

ஆனால், அவர்களது கட்டுப்பாட்டில் இருக்கும் ஹெராட் மாகாணத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி கற்பதற்கு அவர்கள் தடை விதித்துள்ளனர்.

இரு பாலார் கல்விதான் சமூகத்தில் நடைபெறும் குற்றங்களுக்கு அடிப்படை காரணம் என்பதால் அதற்குத் தடை விதிப்பதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (7-4)

### உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :-4 439 105**

**தொற்று :- 212 249 832**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ரில் மூன்று மாவட்டங்களை ...தலிபான் எதிர்ப்புப் படை

...தலிபான்கள் மும்முரம் ...த்தாக்கு பகுதி அருகே ...றியுள்ளதாக தலிபான் ...

தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெனரல் பிஸ்மில்லா முகமது "பஞ்ஷிர் பள்ளத்தாக்கு பகுதிக்கு வடக்கே அமைந்துள்ள பாக்லான் மாகாணத்தில் உள்ள தே சலே, பானோ மற்றும் பால்-ஹிசார் மாவட்டங்களை கைப்பற்றியுள்ளோம்" என டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

ஒரே வாரத்தில் ஆப்கானிஸ்தானின் முக்கிய நகரங்கள் அனைத்தையும் தலிபான்கள் கைபற்றியதை தொடர்ந்து பல இடங்களில் பல்வேறு குழுக்கள் அவர்களுக்கு எதிராக இயங்கி வருகின்றன.

பாக்லானில் உள்ள பானோ மாவட்டம் உள்ளூர் இராணுவ படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என காவல்துறை படைத் தலைவர் கூறியுள்ளதாக உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் செய்திவெளியிட்டது. ஆனால், மோதலின்போது பலத்த உயிர் சேதம்ஏற்பட்டதாகவும்கூறப்பட்டது.

இச்சம்பவம் குறித்து தலிபான்கள் தரப்பிலிருந்து எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. பஞ்ஷிரிலிருந்து தலிபான்களை விரட்டியடிப்போம் என முன்னாள் ஜனாதிபதி அம்ருல்லா சாலே, சோவியத் எதிர்ப்பு முஜாஹிதீன் தளபதி அகமது ஷா மசூத் ஆகியோர் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

ஆப்கன் அரசு படைகள், மற்ற தீவிரவாதக் குழுக்களை சேர்ந்த 6,000 போராளிகள் இந்த பள்ளத்தாக்கின் பகுதியில் கூடியுள்ளனர். (7-4)

## தெற்கு சாண்ட்விச் தீவுகளில் நிலநடுக்கம்

(விர்ஜீனியா)

தெற்கு அட்லாண்டிக் பெருங் கடல் பகுதியில் அமைந்த தெற்கு ஜோர்ஜியா மற்றும் தெற்கு சாண்ட் விச் தீவுகள் பகுதியில் நேற்று அதிகாலை 12.45 மணியளவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டரில் 6.9 ஆக பதிவாகி உள்ளது.

இந்நிலநடுக்கம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. (7-4)

## ...ய வெற்றிகரமாக ...ரீன்' சரக்கு கப்பல்

...யில், கடந்த மார்ச் மாதம் ஜப்பான் நிறுவனத்துக்கு சொந்தமான, உலகின் மிகப்பெரிய சரக்கு கப்பலான 'எவர் கிரீன்" என்ற சரக்கு கப்பல் சூயஸ் கால்வாய் வழியாக சென்றபோது கால்வாயின் குறுக்கே திரும்பி பக்கவாட்டில் தரை தட்டி நின்றது.

அந்த கால்வாயில் 'எவர் கிரீன்' கப்பல் தரைதட்டி நின்றதால் சர்வதேச நாடுகளில் வர்த்தகத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டது.

ஆனாலும், கப்பல் தரை தட்டியதால் ஏற்பட்ட பாதிப்பு, நீர்வழிப்போக்குவரத்து தடைப்பட்டதால் ஏற்பட்ட இழப்பு உள்ளிட்டவற்றை கணக்கில் கொண்டு 'எவர் கிரீன்' கப்பலை எகிப்து அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

அதன்பின்னர் நீதிமன்றம் மூலம் இந்த விவகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 'எவர் கிரீன்' கப்பல் தனது பயணத்தை தொடர்ந்தது.

இந்நிலையில், பல மாதங்களுக்கு பின்னர் 'எவர் கிரீன்' கப்பல் நேற்று மீண்டும் சூயஸ் கால்வாய் வழியாக பயணம் செய்தது.

இங்கிலாந்தில் இருந்து சீனாவுக்கு செல்லும் 'எவர் கிரீன்' கப்பல் நேற்று முன்தினம் சூயஸ் கால்வாயை கடந்ததாக எகிப்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த முறை கப்பல் எந்த வித சிக்கலும் இன்றி சூயஸ் கால்வாயை கடந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7-4)

## ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய அமெரிக்க பெண் ஊடகவியலாளர்



(காபூல்)

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியது மற்றும் அது தொடர்பான செய்திகளை அந்நாட்டிலேயே தங்கி அமெரிக்காவின் பிரபல செய்தி நிறுவனமான சி.என்.என். நிறுவனத்தில் ஊடகவியலாளராக பணியாற்றி வரும் பெண் ஊடகவியலாளர் கிளரிசா வார்ட் பதிவிட்டு வந்தார்.

இவர் தலிபான்களிடம் பேட்டியும் எடுத்துள்ளார். ஆப்கானிஸ்தானின் களநிலவரத்தை இவர் பல்வேறு கோணங்களில் உலக நாடுகளுக்கு வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில், சி.என்.என். ஊடகவியலாளர் கிளரிசா வார்ட் நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறினார்.

அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான விமானம் மூலம் கிளரிசா வார்ட் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிய கிளரிசா உட்பட அனைவரும் தற்போது கட்டார் நாட்டில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டாரில் இருந்து அவர்கள் அமெரிக்காவுக்கு அழைத்து செல்லப்பட உள்ளனர். (7-4)

## ஊரடங்கிற்கு எதிர்ப்பு அவுஸ்திரேலியாவில் போராட்டம்




(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் பல்வேறு நகரங்களில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுக்குள் உள்ளதால் ஊரடங்கில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.


ஆனாலும், அந்நாட்டின் மிகப் பெரிய நகரங்களான சிட்னி, தலைநகர் கான்பெர்ரா, மெல்பேர்ன் போன்ற நகரங்களில் கொரோனா பரவல் மெல்ல அதிகரித்து வருகிறது. இதனால், அந்த நகரங்களில் ஊரடங்கு அமுலில் உள்ளது.

அத்தியாவசிய காரணங்கள் இன்றி மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் பரவலுக்கு ஊரடங்கு அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் நாடு தழுவிய போராட்டம் நடைபெற்றது. பல்வேறு நகரங்களில் நூற்றுக் கணக்கானோர் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் நடைபெற்ற இந்த போராட்டத்தில் மொத்தம் 250 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் பலருக்கு கொரோனா விதிகளை மீறியதாக அபராதம் விதிக்கப்பட்டது. (7-4)

## மலேசியப் பிரதமராக இஸ்மாயில் சப்ரி பதவியேற்றார்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் பிரதமராக பதவி வகித்து வந்த முகைதின் யாசின், கூட்டணியில் ஏற்பட்ட குழப்பத்தால் கடந்த திங்கட்கிழமை அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதனை தொடர்ந்து மன்னர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா, 61 வயதான இஸ்மாயில் சப்ரியை பிரதமராக நியமித்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள அரண்மனையில் மன்னரின் முன்னிலையில் இஸ்மாயில் சப்ரி மலேசியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைபிடிப்பவர்களுக்கு கொவிட் தொற்றும் வாய்ப்பு பல மடங்கு அதிகம்

(கொழும்பு)

**புகைபிடிப்பவர்களுக்கு கொவிட் தொற்றுவதற்கான வாய்ப்பு 14 மடங்கு அதிகம் என்று தேசிய புகையிலை மற்றும் மது ஆணையகம் தெரிவித்துள்ளது.**

புகையிலை மற்றும் அல்க ஹோல் தொடர்பான தேசிய ஆணையத்தின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ கூறுகையில்,

ஒருவர் புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருந் ததால் அவர் கொவிட் வைர ஸால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதை விட கொவிட் வைரஸின் தொற்றால் இறக்கவும் வாய்ப்புள் ளது.

புகைபிடிப்பவருக்கு தடுப்பூசி கிடைத்தாலும், அதன் காரண மாக அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# இரு சிறுவர்களின் உயிர்களை காவுகொண்ட ஆட்டோ

(கொழும்பு)

அம்பேகமுவ - மயிலவல பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்கி சிறுவர்கள் இருவர் பரிதாபமாக பலியாகி யுள்ளனர்.

வெலிஓய நோக்கி பயணி த்த முச்சக்கரவண்டியானது சாரதியின் கட்டுப்பாட்டை இழ ந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள் ளதாக ஆரம்ப கட்ட விசார ணைகளில் இருந்து தெரிய வந்தள்ளது.

சம்பவத்தில் 16 மற்றும் 17 வயதுடைய சிறுவர்கள் இரு வரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

இதேவேளை விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி படுகாயம் அடைந்துள்ளதாக வும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்த நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் முன் னெடுத்துள்ளனர். (நி-5)

## மின்சார பேருந்துகளை கொள்வனவு செய்ய தயாராகும் போக்குவரத்து அமைச்சு

(கொழும்பு)

எரிபொருள் மூலம் இயங்கும் பேருந்துகளுக்கு பதிலாக மின் சார பேருந்துகளை வாங்க போக் குவரத்து அமைச்சு தயாராகி வருகின்றது.

மாநகரப் பேருந்து திட்டத்திற் காக எரிபொருள் மூலம் இயங் கும் 200 பேருந்துகளை கொள் வனவு செய்ய திட்டமிடப்பட்டது.

இந்த நிலையில், அதற்கு பதிலாக மின்சார பேருந்துகளை கொள்வனவு செய்ய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மின்சார பேரு ந்துகள் இதுவரையில் இயங்கா ததால், முதலில் 25 மின்சார பேருந்துகளை கொள்வனவு செய்து சிறிய திட்டமாக முதலில் முன்னெடுக்க அமைச்சு தீர்மா னித்துள்ளது.

கொட்டாவ, மாகும்புர போக் குவரத்து மையத்தில் இருந்து கொழும்பு நகரத்தின் வீதிகள் பலவற்றில் இந்த திட்டம் செயற் படுத்தப்படவுள்ளதாக குறிப்பி டப்படுகின்றது.

இந்த திட்டத்திற்கமைய சார்ஜ் செய்ய தேவைப்படும் சார்ஜிங் நிலையங்கள் சூரிய சக்தியால் கட்டமைக்க வடிவமைக்கப்பட் டுள்ளன. (நி-5)

# 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு விரைவில் தடுப்பூசி - சன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

12 வயதுக்கு மேற்பட்ட சிறு வர்கள் மற்றும் யுவதிகள் ஆகி யோருக்கு தடுப்பூசி செலுத்து வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இரா ஜாங்க அமைச்சர் சன்ன ஜய சுமன தெரிவித்துள்ளார்.


அதாவது தொற்றா நோய் மற்றும் விசேட தேவையுடைய 12 முதல் 18 வயதுக்கு இடை ப்பட்ட சிறுவர்களுக்கு முன்னு ரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்துமாறு சுட்டிக்காட்டியுள் ளதோடு பைஸர் தடுப்பூசியே சிறுவர்களுக்கு பொருத்தமானது எனவும் வைத்தியர்கள் குறிப்பிட் டுள்ளதாக இராஜாங்க அமைச் சர் சன்ன ஜயசுமன தெரிவித்து ள்ளார்.



எனவே, இந்த விடயம் குறி த்து கலந்துரையாடி எதிர்வரும் நாட்களில் தீர்மானமொன்றை எட்டவுள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2387

**ஆதிரை**





**சாலினி**




**வசீகரன்**




**கேன்சிகா**





**ஜெயந்தன்**

**இலங்கையில் இருந்து பார்! !!!**

உன்னை சுற்றி நோயாளி காவு வண்டி
சத்தம் கேட்கும்...!!!
ஐந்து கிராம் மஞ்சள் கூட ஐந்து பவுண்
தங்கமாய் தெரியும்...!!!
அங்கர் வைத்திருக்கும் கடைக்காரன்
தெய்வம் ஆவான்...!!!
சமையல் எரி வாயு தேடி தெரு
தெருவாய் அலைவாய்...!!!
பொது முடக்கமா? இல்லை அடக்கமா என
தெரியாமல் சோற்றுக்கு வழி இல்லாமல்
பிச்சை எடுப்பாய்..!!
இலங்கையில் இருந்து பார்...!!!

**யனோவா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை உலுக்கும் கொரோனா மரணங்கள்

## ஆசியாவில் இலங்கைக்கு இரண்டாம் இடம்

**(கொழும்பு)**

**ஆசிய வலயத்தில் அதிக கொரோனா மரணங்கள் பதிவான வரிசையில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது.**

கடந்த ஒரு வாரத்தில் பதிவாகிய கொரோனா மரணங்களின் அடிப்படையில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது.

உலக கொரோனா நிலைமை குறித்து அறிக்கையிட்டு வரும் world ometers இணையத்தளத்தை சுட்டிக்காட்டி இந்த தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் இலங்கையில் 1209 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதாவது ஒவ்வொரு ஒரு மில்லியன் மக்கள் தொகையில் 56 பேர் உயிரிழக்கின்றனர்.

ஆசிய வலயத்தில் உள்ள 48 நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. ஜோர்ஜியா முதலிடத்தில் உள்ளது. மேலும் உலக நாடுகள் பட்டியலில் அதிக கொரோனா மரணங்கள் இடம்பெறும் 9வது நாடாக இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# பெற்றோலுக்கு தட்டுப்பாடு என செய்தியை கசிய விட்டவர் கைது

(கொழும்பு)

நாட்டில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கருத்தொன்றை வெளியிட்ட தேசிய ஊழியர் சங்கத்தின் பெற்றோலிய தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித்த குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போதுள்ள எரிபொருள் 11 நாட்களுக்கே போதுமானது என அவர் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். அத்துடன் எரிசக்தி அமைச்சரின் உத்தியோக பூர்வ வீட்டின் சீரமைப்புக்கு ஏற்படும் செலவு தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இருப்பதாகக் கூறி மக்களை தவறாக வழிநடத்தியதற்காக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# விமான நிலையங்கள் தொடர்ந்து செயற்படும்

## ஜனாதிபதி அறிவுறுத்தல்



(கொழும்பு)

ஊரடங்கு காலப்பகுதியில் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களின் செயற்பாட்டைத் தொடருமாறு ஜனாதிபதி சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்ட போதிலும், இலங்கை விமான நிலையங்களின் செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படக்கூடாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் மக்கள் விமான நிலையங்களுக்குச் செல்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கொவிட் தொற்று வேகமாக பரவிவரும் நிலையில், அதனை கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் அமுலில் இருக்கும் வகையில் இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொவிட் நிதிக்கு ஒகஸ்ட் மாத சம்பளத்தை வழங்கிய அமைச்சர்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தனது ஒகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட் நிதிக்கு வழங்க முடிவு செய்துள்ளார்.

நாட்டில் கொவிட் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக தனது சம்பளத்தை கொவிட் நிதிக்கு வழங்குமாறு அவர் தனது அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ரயில் பயணம்

நமது ஊர் எழுத்தாளர் ஒருத்தர் (மணியன்) பாரீசுக்குப் போயிருந்தார். அப்போது அங்கே ஒரு ரயிலிலே பிரயாணம் செய்தார். முதல் நாள் இராத்திரி ஒரு ஊரிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலையில் இன்னொரு ஊருக்குப் போய்ச் சேர வேண்டும் என்றார் அவர்.

அதற்காக ரயிலிலே ஏறினார். டிரெஸ் எல்லாம் மாற்றி தூங்கப்போகின்ற சமயத்திலே ஒரு பணியாளர் வந்தார். ஒரு தட்டிலே இரண்டு பிளம்-கேக்கை வைத்து நீட்டினார். இரண்டும் ரொம்பப் பெரிய கேக். இவர் வாங்கி சாப்பிட்டார்.

கொஞ்ச நேரத்திலே கோப்பியும் கொண்டு வந்து கொடுத்தார். அந்த ஆள் அதையும் வாங்கி சாப்பிட்டார். அதற்கு அப்புறம் அந்த ஆளைப் பார்த்து "கொஞ்சம் தண்ணீர் கொடுக்க முடியுமா?" என்று கேட்டார் இவர்.

ஒரு போத்தலிலே தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அவர் போய்விட்டார். இவர் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திட்டார். மறுநாள் காலையில் எழுந்தார். இப்போதும் அருமையான கோப்பியும் கேக்கும் கொண்டு வந்து கொடுத்தார்கள் அதையும் வாங்கிச் சாப்பிட்டார்.

பாரீஸ் நகரத்திலேயிருந்து 1000 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலே இருந்த மாண்ட் பலியேர் (Mont Pellier) என்கிற ஊரிலே ரயில் நின்றது. இவர் பெட்டியை எடுத்துக்கொண்டு இறங்குவதற்கு தயாரானார்.

அப்போது அந்த ஆள் ரொம்பப் பணிவாக இவரிடம் வந்து ஒரு பில்லைக் கொடுத்தார்கள். நம்ம ஊர்க் கணக்கிலே 10 ரூபா 50 காசுக்கு அந்த பில் இருந்தது. இவர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, "எதற்கு இந்த பில்? இராத்திரி கோப்பி, கேக்கெல்லாம் கொண்டுவந்து கொடுத்தீர்களே அதற்காகவா?" என்று கேட்டிருக்கிறார் இவர்.

"இல்லை சேர் கேக்-காப்பியெல்லாம் இனாம்.. அதுக்குத் காசு கிடையாது! நீங்கள் கேட்டீர்களே குடிக்கிறதற்குத் தண்ணீர்... அந்த ஒரு போத்தல் தண்ணீருக்குத் தான் இந்த பில்!" என்றார் அவர்! எப்படி இருக்கு பாருங்கள் இது!

சரி இப்போது இந்தியாவுக்கு வருவோம். நமது தேசத்திலே முதல் ரயில்பாதை திறந்து விடப்பட்ட நாள் 1853 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி. அதை ஒட்டி வரவேண்டும் என்கிறதற்காகத்தான் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரைக்கும் ரயில்வே வாரம் என்று கொண்டாடுகிறோம்.

George Stephenson தான் முதல் Locomotive எஞ்சினை வெற்றிகரமாக உருவாக்கினார். அதனுடைய விளைவுதான் இன்றைக்கு நாம் உல்லாசமாக ரயிலிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலே ரயில் ஓடுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் அப்போதைய ஆளுநர் ஜெனரல் Lord Dalhousie!

இன்றைக்கு இந்திய ரயில்வே என்கிறது ஆசியாவிலேயே ரொம்பப் பெரிசு! உலகத்திலேயே நாலாவது பெரிய அமைப்பு இது! இதை நல்ல விதமாக வைத்து காப்பாற்ற வேண்டியது நமது பொறுப்பு! பெருகி வருகிற நம்ம சனத்தொகைக்கு ஈடு கொடுத்து வசதிகளைச் செய்து கொடுக்கிறது நம்ம இந்திய ரயில்வே!

கூட்டம் அதிகமாக இருக்கிற காலங்களிலே ஸ்பெஷல் ரயில் எல்லாம் கூட விடுகிறார்கள்! ரயில் மட்டும் இல்லை என்றால் இவ்வளவு கூட்டம் இருக்கிறதற்கு நமது ஊர் பிரயாணம் ரொம்ப சங்கடமாப் போய்விடும். இப்போது கூட சில சமயம் அப்படித் தான் ஆகிடுது.

ஒரு ரயில் பம்பாயிலேயிருந்து புறப்பட்டு சென்னைக்கு வந்து கொண்டிருக்கு! அதிலே ஒரு பொண்ணு இன்னொருத்தர் பேரிலே ரிசர்வ் செய்திருந்த ஒரு டிக்கெட்டை வாங்கி சரிபார்த்து பேப்பரிலே டிக் செய்து விட்டு வருகிறார். இந்த பெண்ணுக்கு உள்ளுக்குள்ளே பயம்! என்னென்றால் வேறு ஒருத்தர் டிக்கெட்டிலே இது வந்துகொண்டிருக்கிறார். டிடிஆர் நெருங்கி வந்துவிட்டார். டிக்கெட்! என்றார்.

இவர் எடுத்துக் கொடுத்தார். பேர் என்ன? என்று கேட்டார். இந்தப் பெண் சமயோஜிதமாக டிக்கெட்டில உள்ள பேரையே சொல்லிவிட்டார் நிர்மலா என்று! அவரும் சரிபார்த்து டிக் அடித்து விட்டு டிக்கெட்டை திருப்பிக் கொடுத்துவிட்டு அப்பாலே போய்விட்டார். இந்த சமயம் பார்த்து பக்கத்திலே இருந்த இன்னொரு பொண்ணு... "ஏன்டி கமலா எங்கே போறாய்? சென்னைக்கா?" என்று சத்தம் போட்டுக் கேட்டுவிட்டது.

உடனே இந்தப் பெண் உஸ் சத்தம் போட்டு என் பேரைச் சொல்லாதே என் பேரு நிர்மலா என்று டிடிஆர் இடம் சொல்லியிருக்கேன் என்றாள். "அவர் தான் செக் பண்ணிவிட்டு போய்விட்டாரே!" என்றது அது!

இது டிடிஆர் காதுலே விழுந்துவிட்டது. அவர் மெதுவா கிட்டே வந்தார். பாவம் இந்தப் பெண் பயந்து கொண்டு எழுந்து நின்றது. இப்போது அந்த டிடிஆர் சொன்னர்

"பயப்படாதேயம்மா... உனக்கு ஏதோ அவசரம் அதுதான் இன்னொருத்தர் பேரிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கிறாய்! உன் நிலைமை எனக்குப் புரிகிறது! பம்பாயிலே டிக்கெட் கிடைக்கிறது எவ்வளவு சிரமம் என்று எனக்கும் நல்லா தெரியும். அதனாலே தான் நானே டிடிஆர் வேஷத்திலே வந்துகொண்டிருக்கின்றேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**14**

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



ஆனால் இன்றைய அமைச்சர்களோ அது சபைகளுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் உரியது என்கிறார்கள். எனவே ஒருங்கியை நிரலில் உள்ள இத்தகைய விடயங்கள் மாகாண சபை நிரலுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து உணவுக் களஞ்சியங்களையும் மாகாண அரசிடம் ஒப்படைப்பதுடன் உணவுக்கட்டுப்பாடு தொடர்பான அனைத்து உத்தியோகத்தர்களையும் மாகாண அரசின் வசம் ஒப்படைக்க வேண்டுமென்று இச்சபை கோர வேண்டும்.

### சந்தைப்படுத்தல் சம்பந்தமாக அவரது முன்மொழிவு

சந்தைப்படுத்தல் பற்றிய அதிகாரம் சட்டத்தினால் மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட போதிலும் இதுவரை பரவலாக்கப்படவில்லை. முன்னைய பாராளுமன்ற அமைச்சர் முழுமையாகப் பரவலாக்கப்படுமென்று கூறிய போதிலும் இதுவரை பரவலாக்கப்படவில்லை.

எனவே நெல் சந்தைப்படுத்தும் சபை, சந்தைப்படுத்தும் திணைக்களம், விற்பனை நிலையங்கள், கூட்டுறவு, மொத்த வியாபார நிலையம் ஆகியவற்றின் வாகனங்கள், வளங்கள் அனைத்தும் உடனடியாக மாகாண அரசிடம் ஒப்படைக்கக்கோரி இச்சபை தீர்மானிக்க வேண்டும் என்று நான் முன்மொழிகின்றேன்.

### கைத்தொழிற் துறையும் மின்சாரமும் - முதலமைச்சரின் முன்மொழிவு

இதுவரை எந்தவொரு கைத்தொழிற்சாலையும் மாகாண அரசாங்கத்தின் வசம் ஒப்படைக்கப்படவில்லை. 13ஆவது திருத்தச்சட்டத்தின் ஒதுக்கிய நிரலில் "எக் கைத்தொழில்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாடு பொது மக்களின் நலனுக்கு உசிதமானதெனச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டதோ" அக் கைத்தொழில்கள் மத்திய அரசின் வசம் இருக்கும்.

இதன் பிரகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தவிர ஏனையவை மாகாண அரசின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்களை அடையாளங் காணக்கூடியதான பாராளுமன்றச் சட்டம் இயற்றப்படவில்லை. இதனால் மாகாண அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் எந்தவொரு கைத்தொழிற்சாலைகளும் ஒப்படைக்கப்படவில்லை.

1949 ஆம் ஆண்டு பத்து இலட்சம் மலையகத் தொழிலாளர்களது வாக்குரிமையைப் பறித்து விட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்களைக் கட்டுவதற்கு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை என்பனவும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கல்லோயா கந்தளாய் சீனித் தொழிற்சாலைகளும் எமது பிரதேசங்களில் உள்ள ஏனைய தொழிற்சாலைகளும் மாகாண அரசாங்கத்திடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டுமென்று இந்தச்சபை கோரவேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை மாகாண சபை நிரலில் 34ஆவது பிரிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "நீர் மின்சக்தியும் தேசிய மின்னிணைப்புக்கு மின் வழங்குவதற்கு தோற்றுவிக்கப்படும் சக்தியும் அல்லாத மின்வலுவைத் தோற்றுவிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் மாகாணத்திலுள்ள அவ்விடயங்களையும் - வசதிகளையும் அபிவிருத்தி செய்தலும், பேணிக்காத்ததும், முகாமைசெய்தலும்" மாகாண சபை மேற்கொள்ளக் கூடிய பணிகளாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

> 1949 ஆம் ஆண்டு பத்து இலட்சம் மலையகத் தொழிலாளர்களது வாக்குரிமையைப் பறித்து விட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்களைக் கட்டுவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்பட்ட வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை என்பனவும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கல்லோயா கந்தளாய் சீனித் தொழிற்சாலைகளும் எமது பிரதேசங்களில் உள்ள ஏனைய தொழிற்சாலைகளும் மாகாண அரசாங்கத்திடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டுமென்று இந்தச்சபை கோர வேண்டும். வடக்கு- கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள்.

அதேவேளை ஒருங்கியை நிரலில் 32 ஆவதாக "மாகாணத்திலுள்ள மின்னிணைப்பு வழங்கலை விசாரித்தலும் மாகாணத்தினுள் மின்சக்தி பயன்படுத்தப்படுவதனை மேம்படுத்தலும், ஒழுங்குபடுத்தலும்" என்ற விடயம் தொடர்பாக மாகாண, மத்திய அரசாங்கங்கள் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்" என்கிறது.

மின்சாரத்துறையில் நீர்மின் சக்தி தேசிய மின்னிணைப்பிற்காகத் தோற்றுவிக்கப்படும் சக்தி தவிர மாகாணத்தின் மின் உற்பத்தி நிலையங்களைத் தோற்றுவிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த தாராள மனப்பான்மை, சட்டத்தில் காட்டப்பட்டிருப்பினும் நடைமுறையில் ஒன்றுமே செய்ய முடியாது.

நீர்மின்சக்தி பரந்தளவில் நாடு முழுவதும் வழங்கப்படுகிறது. இந்த நிலையில் நாம் ஒரு அனல் மின் நிலையத்தை அமைத்தால் போட்டி நிலை ஏற்படும். பொருளாதார ரீதியில் அனல் மின் உற்பத்தியை விட நீர்மின் உற்பத்தி சிக்கனமானது. இதனால் நீர்மின் உற்பத்திக்கே நடைமுறையில் வரவேற்பிருக்கும்.

எனவே எமக்கு வழங்கப்படும் நீர்மின்வலுவிற்கான உற்பத்திச் செலவையோ அல்லது சலுகைக் கட்டணத்தையோ மத்திய அரசு அறவிடட்டும். ஆனால் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் மின்சார நிர்வாகம், மின்சார அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்களை எமக்கு வழங்க வேண்டுமென்று இந்தச் சபை கோரவேண்டும்.

### சுற்றுலாத்துறை சம்பந்தமாக அவரது முன்மொழிவு

சுற்றுலாத்துறை என்கின்ற விடயம் ஒருங்கியை நிரலில் இடம் பெற்று இருக்கின்றது. இதனால் இந்த விடயம் மத்திய அமைச்சரினால் தீர்மானிக்க வேண்டியநிலை நடைமுறையில் ஏற்பட்டிருந்தது. தற்போது உள்ளூராட்சி அமைப்புகளுக்குக் கீழ் இயங்கிவரும் வாடி வீடுகள் மட்டுமே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் கீழ், உள்ளூராட்சி அமைச்சின்கீழ் வடக்கு - கிழக்கு பகுதியில் இயங்கிவரும் சுற்றுலா விடுதிகள் ஒப்படைக்கப்படவில்லை. எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து சுற்றுலா வளங்களும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை இங்கு முன் மொழிகிறேன்.

### பகிரங்கசேவை ஆணைக்குழு சம்பந்தமாக அவரது முன்மொழிவு

பகிரங்க அரசாங்க சேவையாளர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் பதவிவிலக்கல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை செய்தல் ஆகிய அதிகாரங்கள் அடிப்படையில் மத்திய அமைச்சர்களுக்கு இருந்தாலும் அவர்கள் அவ்வதிகாரங்களைப்பகிரங்க சேவை ஆணைக்குழு போன்றவற்றிற்கு மாற்றுகின்றார்கள்.

மாகாண அடிப்படையில் பகிரங்க சேவை ஆணைக்குழு இருந்த போதிலும் மாகாண அமைச்சரவைக்கு மேற்கூறிய அதிகாரங்களோ கைமாற்றுகின்ற ஆற்றலோ சட்டத்தினால் வழங்கப்படவில்லை. ஆளுநருக்கே பகிரங்க சேவை ஊழியர்களின் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவரே இவ்வதிகாரங்களை மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துகின்றார். அவர் இவ் அதிகாரங்களை மாகாண அமைச்சரவையிடம் கையளிக்கக்கூடியதாக சட்ட ஏற்பாடுகள் இல்லை.

மாகாண அமைச்சுகளில் செயலாளர்களாக பணிபுரிபவர்கள் முன்பு மத்திய அரசாங்க அதிகாரிகளாக இருந்த போது தமக்கு கீழே உள்ள சில உத்தியோகத்தர்களை நியமிக்கும் அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பியோன்களை நியமிப்பதற்குக் கூட ஆளுநரிடம் போக வேண்டிய நிலை. ஒருவகையில் இந்த மாகாண அரசாங்கத்தில் கடமை புரியவந்த அதிகாரிகள் தரம் குறைக்கப்படுகிறார்கள்.

இந்திய அமைப்புச்சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசின்" பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதியும் மாநில அரசின் பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஆளுநரும் அதிகாரங்களை கையளிப்பார்கள்".


(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர். முடிவு வரும் வரை வீட்டிலேயே இருங்கள்

(கொழும்பு)

**காய்ச்சல் உட்பட ஏனைய நோய்க்காரணங்களினால் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்வோர் இறுதிப் பெறுபேறு கிடைக்கும் வரை வீடுகளில் தங்கியிருக்க வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.**




தற்சமயம் அதிக எண்ணிக்கையிலானோர் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்கிறார்கள். இவ்வாறு நோய்தொற்றுக்குள்ளாகி இறுதி அறிக்கை கிடைக்க முன்னர் தொழிலுக்குச் செல்பவர்களினால் பாரிய பாதிப்பு ஏற்படலாம் என்றும் சுகாதாரத் துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## சந்தோச வாழ்வு தரும் திருவோணம்



**விரதம் இருக்கும் முறை**

மகாபலி பகவானுக்கு தானம் கொடுத்தது ஆவணி மாதம் திருவோண தினத்தன்று நடந்தது. அன்றைய தினம் மகாபலி மன்னன் தன் மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்களா? என்பதை பார்ப்பதற்காக பாதாள லோகத்தில் இருந்து கேரளாவுக்கு வருவதாக ஐதீகம். இதை நினைவு கூறும் வகையிலும், மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், ஓணம் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

மகாபலி மன்னனின் வருகைக்காக இந்த திருவிழா 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது. 'அத்தம்' என்று கூறப்படும் முதல் நாளில் இருந்தே மகாபலி சக்கரவர்த்தியின் வருகைக்காக கேரள மக்கள், வீடுகள் தோறும் வாசலில் கோலமிட்டு வண்ண, வண்ண பூக்களை வட்டமாக அடுக்கி வைத்து அலங்கரித்து மகிழ்வர். அது 'அத்தப் பூகோலம்' என்று அழைக்கப்படுகிறது. கேரளா முழுவதும் மகாபலி, விஷ்ணு உருவங்கள் பெரிய அளவில் வரையப்படும்.

10ஆவது நாளாக திருவோணம் தினம் கேரளாவில் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் மக்கள் வீடுகளை அலங்கரித்து வைப்பார்கள். திருவிளக்கேற்றி வழிபடுவார்கள். கும்மியடித்து மகிழ்வர். எல்லா கோவில்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

பக்தி பாடல்களை பாடி, பிரார்த்தனை செய்வர். குடும்ப பெரியவர்கள் புத்தாடைகளை வழங்க, அதை குடும்பத்தில் உள்ளவர்கள் பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கி பெற்று அணிந்து மகிழ்வர். ஓணம் அன்று சிறப்பான உணவு வகைகளை சமைத்து உறவினர்களுடன் உண்டு மகிழ் வார்கள். அன்றைய விருந்தில் அடப்பிர சாதம் என்னும் ஸ்பெஷல் பாயாசம் இடம் பெறும். இளைஞர் கள் வாண வேடிக்கை செய்து மகிழ்வர். அன்று மாலை 'செண்டை' என்று அழைக்கப்படும் கேரள பாரம்பரிய மேள தாளத்துடன் புலி ஆட்டம், சிங்காரி மேளம், கதகளி நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், நீண்ட படகுப் போட்டி என பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது

(திருமலை)

திருகோணமலை, குச்சவெளி, ஜயநகர் பிரதேசத்தில் 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சாவுடன் 3 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 3 கிலோ 548 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்ட குறித்த கேரள கஞ்சா, விற்பனை நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 41 மற்றும் 49 வயதுகளையுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக குறித்த சந்தேக நபர்கள், கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (நி-5)

## ஆப்கானிஸ்தானிலிருந்து இதுவரை 46 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் உள்ள 86 இலங்கையர்களில், இதுவரை 46 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 20 இலங்கையர்கள் நாடு திரும்ப எதிர் பார்த்துள்ளதாகவும், எஞ்சிய 20 பேர் ஆப்கானிஸ்தானில் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தலிபான்கள் நாட்டை பிடித்த போது, காபூலில் உள்ள 8 இலங்கையர்கள் அங்கிருந்து வெளியேறி கட்டார் மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கு சென்றிருந்தனர்.

3 இலங்கையர்கள் இங்கிலாந்துக்கும், 5 பேர் கட்டார் நாட்டிற்கும் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சுகாதார விதிமுறை மீறல் மேலும் 452 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் மொத்தம் 452நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவன்ரயான காலப்பகுதியில் 56 ஆயிரத்து 234 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

## பொருளாதார மத்திய நிலையங்களை இரு நாட்களுக்கு திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் நாட்டிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்களையும் இரு நாட்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நாட்டின் அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களும் திறக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சஷீந்ர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்போது, மொத்த விற்பனைக்காக மாத்திரம் பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## உதவி



கழுதை ஒன்று, நிறைய பொதி சுமந்து கொண்டு சென்றது. அதன் பின்னால் கழுதையின் எஜமானரும், அவர் வளர்க்கும் நாயும் வந்து கொண்டிருந்தனர்.

செல்லும் வழியில் புல் தரையைப் பார்த்ததும் கழுதையை அங்கு மேயவிட்டு மரத்தின் நிழலில் படுத்துத் தூங்கினார் எஜமானர்.

கழுதை அங்கிருந்த புற்களை நன்கு மேய்ந்தது. ஆனால், நாய்க்குத் தின்பதற்கு எதுவுமில்லை. பசி, அதன் வயிற்றைப் பிடுங்கியது.

பொறுத்துப்பொறுத்துப் பார்த்த நாய், கடைசியாக கழுதையைப் பார்த்து, "நண்பனே, என்னால் பசி தாங்க முடியவில்லை. எஜமானரோ தூங்குகிறார். கொஞ்சம் கீழே படு. உன் பொதியில் உள்ள உணவில் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன்" என்று கெஞ்சியது.

நாயின் கெஞ்சலை கழுதை பொருட்படுத்தவில்லை. அது ஆனந்தமாகப் புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. நாயும் விடாமல் கெஞ்சிக் கொண்டிருந்தது.

நாயின் தொந்தரவு தாங்காத கழுதை, "என்னப்பா அவசரம்? எஜமானர் எழுந்திரிக்கட்டும். அவர் சாப்பிடும் போது உனக்கும்தான் கொடுப்பாரே" என்றது. வேறு வழியில்லாமல் நாய் சோர்ந்து போய் படுத்துக் கொண்டது.


அப்போது ஓநாய் ஒன்று மேய்ந்து கொண்டிருந்த கழுதைமீது பாய்ந்தது. பயத்தால் அலறிய கழுதை, "நண்பா, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று" என நாயைப் பார்த்து கதறியது.

படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திரிக்காமல், "ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையாக இரு, எஜமானர் விழிக்கட்டும். அவர்தான் கட்டாயம் உனக்கு உதவி செய்வாரே" என்றது நாய்.

கழுதை, நாய்க்கு உதவி செய்யாமல் தான் செய்த தவறை நினைத்து வருந்தியது.

நீதி: நாம் மற்றவர்களுக்கு உதவினால்தான், மற்றவர்கள் நமக்கு உதவி செய்வார்கள்.

# மகாபாரதம்




பொறாமையின்மை, யுக்தியால் வரி வசூலித்தல், உபாயமின்றி வரி வாங்காமை, நல்லவர்களை அணைத்துச் செல்வது, சூரத்தனம், சுறுசுறுப்பு, உண்மை, குடிமக்களின் நன்மை, நேராகவும் கபடமாகவும் பகைவர் பலம் பெறாமல் பார்த்துக் கொள்வது.

பழுதான கட்டடங்களைப் பழுது பார்ப்பது, காலத்திற்கேற்ப உடல் தண்டனை, பொருள் தண்டனை விதிப்பது, படைகளை மகிழ்விப்பது, செயலில் சோர்வின்மை, கருவூலத்தைப் பெருகச் செய்வது, நகரைப் பாது காப்பது, காவற்காரரிடம் நம்பிக்கை வைக்காமலிருத்தல், நண்பர், பகைவர், நடுநிலையாளர் இவர்களைப் பகுத்தறிதல், வேலைக்கா[illegible]ரைப் பகைவரிடம் சேராதிருக்குமாறு செய்தல், நகரை வலம் வந்து [illegible]வது, துயருற்றோருக்கு ஆறுதல் கூறுவது, பகைவரை அலட்சியப்படுத்தாமை, இழிந்த செயல்களை விலக்குதல், நியாயத்துடன் பொருந்திய விடாமுயற்சி ஆகிய இக்குணங்கள் இரட்சண தருமங்களாகும்.

இந்திரன் விடா முயற்சியால்தான் அமுதத்தைப் பெற்று அசுரர்களைக் கொன்று இவ்வுலகிலும் தேவர் உலகிலும் பெரும்புகழ் பெற்றான். முயற்சியால் சிறந்தவன் கல்வியில் சிறந்த பண்டிதனை விட மேலானவன்.

அரசன் அறிவுடையவனாக இருந்தாலும் அவனிடம் முயற்சியில்லை எனில் அவன் பகைவரால் வெல்லப்படுவான். அரசன் மிக்க பலமுடையவனாக இருந்தாலும் பகை சிறிதென்று அலட்சியமாக இருக்கக் கூடாது.

நெருப்புச் சிறிதாயினும் சுடும். நஞ்சு கொஞ்சமாக இருந்தாலும் கொல்லும். இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு ஆளும் அரசன் இறந்த பிறகும் புகழப்படுவான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சிரமங்களுடன் பாடுபட்டு அவற்றை வெல்வது மனித நலன்களில் மிகச் சிறந்தது.
> – *சாமுவேல் ஜான்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயற்கை விவசாயத்துக்கு பழக்கப்படுத்திக் கொள்ளுதல்

கொரோனாத் தொற்றின் ஆக்கிரமிப்புக்குள் எங்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்த வேண்டிய இந்தக் காலகட்டத்தில் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகள் மௌனம் காக்கின்றன.

சில சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை உள்ளதா? என்ற சந்தேகம்கூட எழவே செய்கிறது.

பரவாயில்லை. சுயநல அரசியலை இலக்காகக் கொண்டவர்களின் போலிப் பிரசாரங்களுக்கு ஏமாந்துபோன தமிழ் மக்களின் தலைவிதியை மாற்ற முடியாது என்றால் யார்தான் என்ன செய்ய முடியும்?

ஆளுக்கொரு திசையில் வெறும் சொல்லாடல்களை மையப்படுத்திக் கொண்டு அரசியல் நடத்துகின்ற நம் அரசியல் தரப்புக்களிடையே ஒற்றுமை ஏற்படாதவரை அவற்றால் எதனையும் சாதிக்க முடியாதென்பதுதான் உண்மை.

தவிர, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கவல்ல சிவில் அமைப்புக்களையும் மேற்குறித்த தமிழ் அரசியல்வாதிகள் இயங்க விடமாட்டார்கள் என்பதையும் இவ்விடத்தில் கூறிக்கொண்டு அதனை அப்படியே விட்டுவிடலாம்.

மாறாக, இங்கு நாம் பேசுபடுபொருளாக எடுத்துக் கொண்டது அசேதனப் பசளை இல்லாத இயற்கை விவசரயத்தை நோக்கி எங்கள் விவசாயப் பெருமக்களை எங்ஙனம் வழிப்படுத்தப் போகின்றோம் என்பது பற்றியதுதான்.

அசேதன பசளையை அடியோடு நிறுத்தி, சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயம் செய்தல் என்ற திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

தொடர்ந்து அசேதனப் பசளையோடு விவசாயம் செய்த எங்கள் வடக்கு – கிழக்கு தமிழர் தாயக விவசாயிகள் எங்ஙனம் இயற்கை விவசாயத்துக்கு முகம்கொடுக்கப் போகின்றனர் என்பது பற்றிச் சிந்திப்பது தலையாய விடயமாகும்.

கொரோனாத் தொற்றுக்குள் சிக்குண்டிருக்கக்கூடிய நம் விவசாயிகள்; நெற்செய்கை உள்ளிட்ட விவசாயச் செய்கை தொடர்பில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டால் மட்டுமே எங்கள் விவசாயிகளின் எதிர்காலம் ஆரோக்கியமாக அமையும்.

தவறும் பட்சத்தில் விவசாயச் செய்கை பாரிய நட்டத்தை ஏற்படுத்துவதுடன் எதிர்கால வாழ்க்கையில் மிகப்பெரும் பாதிப்புகளையும் அவை ஏற்படுத்தவே செய்யும்.

எனவேதான் சேதனப் பசளையுடனான விவசாயச் செய்கைக்கு நம் விவசாயிகள் தயாராக வேண்டும்.

இவர்களை வழிப்படுத்துவதற்கு விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட அத்தனை அரச அமைப்புகளும் இப்போதே செயலாற்றுவது கட்டாயமானது.

அதிலும் குறிப்பாக எங்கள் மரபுக்குரிய பயிர்களைத் தேடி எடுத்து அவற்றை இயற்கை உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்கின்ற வேலைத்திட்டம் அவசரமாக முன்னெடுக்கப்படுவதும் காலத்தின் தேவையாகும்.

# கொரோனா வைரஸ் தொற்றினால் தினசரி 400 மரணங்கள் நிகழலாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சரியான பொறிமுறையைப் பின்பற்றவில்லை என்றால் நாளாந்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 400ஐத் தாண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் ஊடக உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில், கோவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் மரணங்கள் தொடர்பான தகவல்கள் குறித்து கடுமையான கவலைகள் எழுந்துள்ளன.

மரணங்கள் மற்றும் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை தெளிவாக இல்லை என்பதால் சரியான பாதை தெளிவாக இல்லை என்று அவர் கூறினார்.

குறிப்பிட்ட அதிகாரிகள் தங்கள் கடமைகளை கடுமையான முறையில் நிறைவேற்ற வேண்டும். இதற்காக ஒரு அமைப்பு இருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் எதிர்காலத்தில் ஒரு முக்கியமான நிலைமை ஏற்படும் என்றும் மரணங்களின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 400 ஆக உயரும் என்றும் அவர் கூறினார். (ஞா)

## கிராமசேவகருக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் வடக்கு கிராம சேவகருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண் கிராம சேவகருக்கு காய்ச்சல் இருந்த நிலையில் புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் நேற்றையதினம் அன்டிஜன் பரிசோதனையினை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவரும் அவரது குடும்பத்தினரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் அங்கு பணிபுரியும் சில உத்தியோகத்தர்களிற்கு கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை அண்மையில் உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-299)

## கொரோனாத் தொற்றினால் கடந்த 7 நாட்களில் மட்டும் ஆயிரத்து 270 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில்கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழப்பவர்களது எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் கடந்த 7 நாட்களில் 1,270 பேரை பலியெடுத்துள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் நாளாந்தம் வெளியிடப்பட்டு வரும் கோவிட் மரணங்கள் தொடர்பான தரவுகளின் அடிப்படையில் கடந்த 7 நாட்களில் மட்டும் 1,270 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர்.

**ஆகஸ்ட் – 15 – 167 பேர்,**
**ஆகஸ்ட் – 16 – 171 பேர்,**
**ஆகஸ்ட் – 17 – 170 பேர்,**
**ஆகஸ்ட் – 18 – 186 பேர்,**
**ஆகஸ்ட் – 19 – 195 பேர்,**
**ஆகஸ்ட் – 20 – 198 பேர்,**
**ஆகஸ்ட் – 21 – 183 பேர்.**

இதன் மூலம் இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 7,366 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதன் அறிவின் உயர்வில் ஈசன்



கடவுள் எனப் படுபவனே மனிதனானான்,
கருத்தியங்கி, கருத்துயர்ந்து, கருத்தறிந்தான்
கடவுளாய் அனைத்துமே கண்டு விட்டான்
காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்
கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்
கருத்துணர்ந்த நூல்கள் பல எழுதிவைத்தான்
கடவுள் ரகசியமதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்ததெனக் கொண்டான் ஞானி.

எந்தத் தத்துவத்தைக் கடவுள் என்று சொல்லுகிறோமோ, அதுவே அதன் பரிணாம உச்சத்தில் மனிதனாகவும் இருக்கிறது.

மனிதன் தன் அறிவை இயக்கி, அறிவை உயர்த்தி, அறிவையும் அறிந்து விட்டான். அவ்விளக்க நிலையில் தானே எல்லாமாய் இருக்கும் நிலையையும் கண்டுவிட்டான். காண்பவனே மூலமாகவும் முடிவாகவும் இருக்கும் ஏக நிலையைக் கண்டு கொண்டான்.

இந்த நிலையை அறிந்தவன் அறியாதவர்களுக்கு உணர்த்தும் சிறந்த நோக்கத்தோடும், பொதுவாக அறிவைப் பண்படுத்தும் பொருட்டும், ஆராயத் தூண்டும் பொருட்டும், பல நூல்களும் எழுதினான்.

மூலாதாரத் தத்துவத்தின் இரகசியத்தை அறியா நிலையில் - அறிய வேண்டிய நிலையில் - உள்ள யாவருக்கும் அறிய ஆவன செய்வதைத் தன்னிலை விளக்கம் பெற்ற ஞானிகள் தங்கள் கடமையாக் கொண்டார்கள். தம்மையறிந்தவுடன் ஞானிகளின் கடமை தீர்ந்து விடவில்லை.

அரூப்பமான பேராதார சக்தி நிலையில், ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை நோக்குகிறான். கோடானு கோடி உருவங்களில், தானே பல்வேறு தத்துவங்களாய், வேறுபாடாய், உயிரியக்கம் அறிவியக்கமாய், அறிவியக்க நிலையிலும் பல தரப்பட்டதாய், அறிவு நிலையாய், அறிவு நிலையிலும் பல்வேறு துறைகளாய், அளவினதாய், இருப்பதை உணருகிறான்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2021-16.09.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள்



நினைத்ததை நினைத்தவுடன் செய்து முடிக்க நினைக்கும் சிம்ம இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு யோககாரகன் செவ்வாயும், தன-லாபாதிபதியான புதனும் இணைந்திருக்கிறார்கள். குருவின் பார்வை உங்கள் இராசிகளில் பதிகிறது. எனவே எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் 6-ம் இடத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். மேலும் அவர் வக்கிரம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். கொடுக்கல்- வாங்கல் பிரச்சினை தீரும். எதிரிகளின் பலம் குறையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகளும், கணிசமான சம்பளமும் கிடைக்கும்.

உங்கள் இராசிக்கு பஞ்சம -அஷ்டமாதிபதியாக விளங்குபவர் குரு. அவர் சப்தம ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றிருந்தாலும் கூட அவர் பார்வையால் உங்கள் இராசியைப் புனிதப்படுத்துகிறார். எனவே சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், சுயதொழில் தொடங்க ஆர்வம் காட்டுவர். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்த தடை அகலும்.

### உச்ச புதன் சஞ்சாரம்

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு தன - லாபாதிபதியான புதன் உச்சம் பெறுவது யோகம் தான். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமோ, அதைச் செய்து முடிப்பீர்கள்.

### சொந்த வீடில் சுக்கிரன்

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம்பெ றும் சுக்கிரனின் மீது குருவின் பார்வையும் பதிகின்றது. எனவே நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். சகாய




ஸ்தானம் பலம் பெறும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மேன்மையும், புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும்.

### கன்னி-செவ்வாய் சஞ்சாரம்

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. வருமானம் அதிகரிக்கும்.

இல்லத்தில் உள்ள குடும்ப உறுப்பினர்கள், படித்து முடித்த பிள்ளைகள், வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கும்.


### குருவின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்றிருக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். குருவின் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிக்கிறது. எனவே குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழில் முன்னேற்றம் கருதி புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். இம்மாதம் சிவன் வழிபாடு சிறப்பான வாழ்க்கையை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் மாதம். பொருளாதார நிலை உயரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் உருவாகும். கணவன் - மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். தாயின் உடல் நலம் சீராகும். படித்து முடித்த பிள்ளைகளுக்கான திருமண வாய்ப்பு போன்றவற்றை நிறைவேற்ற எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு, அலுவலகத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

## குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும்



நல்ல யோசனைகளை வழங்கும் கன்னி இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். அவரோடு விரய ஸ்தானாதிபதி சூரியனும், 3, 8-க்கு அதிபதியான செவ்வாயும் இணைந்து இருக்கிறார்கள். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். எதையும் யோசித்து செய்ய வேண்டிய மாதம் இது.

உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கிறார். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் அவர் வக்கிரம் பெற்றிருப்பது அவ்வளவு நல்லதல்ல. பூர்வீக சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளுக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டு மன அமைதி குறையும். அதே நேரம் உத்தியோக மாற்றங்களும், புதிய உத்தியோகம் கிடைக்கும் வாய்ப்பும் உண்டு.

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குரு. அவர் 6 ஆம் இடத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். எனவே சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவரும். பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தாய் வழி ஆதரவு உண்டு.

### உச்ச புதன் சஞ்சாரம்

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் உச்சம் பெறுவது அற்புதமான நேரமாகும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுப காரியங்கள் தானாக நடைபெறும்.

### சொந்த வீடில் சுக்கிரன்

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம் பெறும் சுக்கிரனின் மீது குருவின் பார்வையும் பதிகின்றது. எனவே குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். பெற்றோர்களின் ஆதரவோடு உங்கள் தொழிலை பலப்படுத்திக் கொள்வீர்கள்.




### கன்னி-செவ்வாய் சஞ்சாரம்

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். கவனத்தோடு செயற்படவேண்டிய நேரம் இது. எதிர்பார்ப்புகள் நடைபெறுவதில் தடை ஏற்படும்.

இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் எளிதில் கிடைக்கும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். குடும்பத்தினரிடையே ஆரோக்கியத் தொல்லை உரு வாகும்.

### குருவின் வக்கிர இயக்கம்

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் செப்டெம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்கிர இயக்கத்திலேயே இருக்கிறார். மகர இராசி குருவிற்கு நீச்ச வீடாகும். குருவின் பார்வை, உங்கள் இராசியில் பதியப் போகிறது. எனவே தடைகள் அகலும். தனவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தொழிலில் லாபம் கிடைக்கும்.

இம்மாதம் அனுமன் வழிபாடு அல்லல்கள் தீர்க்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பர். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் எதிர்காலக் கனவை நனவாக்குவீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும்.

குருவின் வக்கிர காலத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைக்கும். நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதியை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சிற்றூர்ந்து ஒன்றும் அதன் எதிர்த் திசை. யில் பயணித்த உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மேலும் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சிற்றூர்ந்தின் சாரதி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஞா-100,316)

## குருநகரில்...

யில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக நேற்று மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்த நிலையில் அவர்களை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் துரத்தி வந்த நால்வர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களினால் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு பொலிஸாரும் முப்படையினரும் வீதிச் சுற்றுக்காவல் பணிகளில் ஈடுபடும் வேளையில் வன்முறைக் கும்பல் இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளது. (ஞா-33,101)

## வீதியில் சுற்றி...

ருக்கு துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடு பூராகவும்தற்போதுள்ள கொரோனா நிலைமையினை கட்டுப்படுத்தும் முகமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்.நகரில் நடமாடியோருக்கு யாழ்ப்பாண மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலர், யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதாரப் பிரிவினர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நகரப் பகுதியில் பயணிப்போரை வழிமறித்து அன்டிஜன் பரிசோதனையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா-33)

*(இது தொடர்பாக முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## யாழில் 57...

க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் பெறுவதற்கு தகுதியுடையவர்களின் குறித்த கணிப்பீடுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவை குறித்த விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர் கொழும்புக்கு அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று திங்கள் முதல் குறித்த நிவாரண நிதியினைக் கையளிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஞா-18,33)

## +183 பேர் பலி...

நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 7,366 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 76 பெண்களும் 107 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (ஞா)

## இருவருக்கு...

நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊடாக பிசிஆர் பரிசோதனைக்காக மாதிரி அனுப்பப்பட்ட 62 வயதுடையவருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலை ஊடாக பிசிஆர் பரிசோதனைக்காக மாதிரி அனுப்பப்பட்ட 65 வயதுடையவருக்கும் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-33)

## வவுனியாவில்...

அனுமதிக்கப்பட்டிருந்த சிப்பிகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கோவிட் தொற்று நோயால் நேற்று உயிரிழந்துள்ளார்.

அவர் திடீர் சுகவீனமுற்றநிலையில் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றிநேற்று உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். (ஞா-250,299)

## வடக்கில் 185...

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

**யாழ்.மாவட்டத்தில் 64 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 21 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 08 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 05 பேர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 04 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 04 பேர், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 03 பேர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 05 பேர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்.

**வவுனியா மாவட்டத்தில் 18 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் ஆகியோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமில் 02 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் மேலும் 94 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா)

## 94 பேருக்கு...

பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் 94 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா-250,299)

## ஊரடங்கு சட்டத்...

ஊரடங்கை நீடிப்பதா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இன்று முதலான எதிர்வரும் வாரமானது, 60 வயதிற்கு மேற்பட்ட தடுப்பூசி போடாதவர்களுக்கான விசேட தடுப்பூசி வாரமாக அரசாங்கம் அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

60 வயதிற்கு மேற்பட்ட பலர் தனிப்பட்ட காரணங்கள் மற்றும் பல தவ றான கருத்துக் களால் தடுப்பூசி போடுவதை தவிர்த்து வருகின்றனர்.

கோவிட் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வதற்கு இதுவே காரணம். கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் கோவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டவர்களாவர்.

இந்த நிலையில் இவ்வாரம் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்துவதற்கான முக்கிய வாரமாக காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், முதியவர்களை பராமரிப்பவர்கள், தாமதமின்றி அவர்களை இவ் வாரத்தில் த்டுப்பூசி போட ஊக்குவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ஞா)

## இடி...

• பெய்யும் என கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா, வட மத்தி, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஏற்படும் மின்னல் தாக்கங்களிலிருந்து தம்மை பாதுகாக்கும் வகையில் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## மூன்று வாரங்...

எனவே 60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசியை புறக்கணிக்கக்கூடாது.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசி வழங்குவது மாத்திரமே இதற்கான வழிமுறை அல்ல என்பதால் 3 வாரங்களுக்கேனும் நாடு முடக்கப்பட வேண்டும்.

முடக்கம் குறித்த தீர்மானத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தொற்று நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

60 வயதுக்கு மேற்பட்டோரில் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களையும், ஒரு தடுப்பூசியைக் கூட பெறாதோரையும் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் ஒரு தடுப்பூசியையேனும் பெறாத 60 வயதுக்கு மேற்பட்டோர் ஏனையோரை விட தொற்றுக்குள்ளாகும் வீதம் 9 மடங்கு அதிகமாகும் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ஞா)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னம்மா குழந்தையர்

**பிறப்பு : 11.10.1943 இறப்பு : 22.08.2021**

யாழ்ப்பாணம், உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு மடத்தடியை வதிவிடமாகவும் கொண்ட சின்னம்மா குழந்தையர் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தையர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இலட்சுமி, குணேஸ்வரி (இரத்தினம்), பரமேஸ்வரி (பரமேசு), சறோஜா (தயா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் துரைராசா, காராளசிங்கம், கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது வசிப்பிடமான சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் வடக்கு கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோ.கஜநாத் - 0094755435065 (இலங்கை)
து. லிங்கேஸ்வரன் - 0041764174108 (சுவிட்சர்லாந்து) (7804)

உரும்பிராய் வடக்கு, மடத்தடி,
உரும்பிராய், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## துரைராசா ரவிச்சந்திரன்

**(பிள்ளையார் களஞ்சிய உரிமையாளர், மானிப்பாய்)**

இராஜகாரியர் லேன் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆஸ்பத்திரி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா ரவிச்சந்திரன் கடந்த 20.08.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் சுபோதினியின் அன்புக் கணவரும் மதுரகன், றக்ஷிதா, ஆத்மிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் லீலாவதி, காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் மற்றும் சாந்தகுமாரி, றமேஸ்குமார், ரஞ்சித்குமார் (ஆசிரியர்- நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அம்பிகைபாகன் (லண்டன்), கிரிதரன், பகிரதன் (இத்தாலி), தயாபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 20.08.2021 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7700)

ஆஸ்பத்திரி லேன்,
மானிப்பாய்.

077 540 0702

தகவல்:
மனைவி, பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.